CIRCULATION 3000 COPIES.

THE RANGOON RANJITHA BODHINI.

December, 1908.

Vol. I.] [No. I.

CONTENTS.

	பக்கம்.
இப்பத்திரிகையின் நோக்கம்	1
மனோவசிய சாஸ்திரம்	4
தீர்க்காயுள் ஓங்கும் வழி	5
சாஸ்திராராய்ச்சி சங்கம்	5
விசித்திர விஷய விளக்கம்	6
விநோத வழக்க பழக்கங்கள்	8
அதிரச மஞ்சரி, வைத்தியக்குறிப்பு...	9
ஹிதோபதேசம், அன்பு	13
இந்துமதாசாரமும் சுகாதாரசம்பந்தமும்	17
விடுகதை வினா, கேள்விகளுக்கு விடை	20
ஜீவாதார மந்திரோபதேசம்	24
&c. &c. &c.	32

11, 12, Commissioner Road,
RANGOON.

All Rights Reserved.

ரங்கோன்

ரஞ்சிதபோதினி.

இப்பிரபஞ்சத்தின் கண்ணே இல்வாழ்க்
யில் பிரவேசிக்கும் ஆன்மாக்கள் அனுசரி
வேண்டிய சுசிர்தமுறையையும் புண்ணிய ஒழு
கங்களையும் மானிட மர்ம சாஸ்திரத்தி
ரத்தினச் சுருக்கமாகச் சொல்லிமுடித்தோ
ஆனால் இவ்விஷயமாக நாம் சொல்ல விரும்ப
விஷயங்கள் அனந்தம். அவற்றில் சிற்சில பா
களை நமக்கு அவகாசம் நேர்ந்த அளவு, நம்நா
டவரின் அபிவிர்த்திக்காக வெளியிட நோக்கம
இப்பத்திரிகையை ஆரம்பித்தோம். இதுமாதி
பத்திரிகையா யிருப்பதால் மற்றவர்களுக்கு இப
பத்திரிகையின் நோக்கத்தை தெரிவிக்கும் பொ
ருட்டு அதிகமாய் பற்பல விஷயங்களின் முக
வுரைப் பாகங்களைமட்டும் எழுதிக்குறிப்பிட
லாயிற்று. இனிவரும் பத்திரிகைகளுக்கு கை
தேர்ந்த ஆயுர்வேத பாஸ்கர பண்டித சிரோன்மணிகளும் பல கல்விமான்களும் விஷயதானஞ் செய்வார்கள். நாம் கொண்டிருக்கும் நோக்கம் சாமானியமன்று. பணச்செலவு அதிகம். அத னுண்மையை நாட்செல்லச்செல்ல நமதுநேயர் அறிந்து அகம்பூரிப்பர். ஆதலால் இப்பத்திரிகையை நடத்திவருவதில் எமக்கு உற்சாக முண்டாக்கும் பொருட்டு உடனே நமது நேயர்கள் ஒருவருஷ சந்தாதொகை ரூ. 3. அனுப்புவதுடன் தமதிஷ்டர்களுக்கும் "ரஞ்சித போதினி" யைப்பற்றி உடனே தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படி முன்வந்து ஆதரிக்கும் அன்பர்களில் பத்துப்பேருக்கு ஒருவர் தாம் கொடுத்த தொகைக்கு இரண்டத்தனை பெறுமான முள்ள "மானிட மர்ம சாஸ்திரப்."பிரதி ஒன்று இனமாகப் பெறுவர்.

இதை நியமிக்கும் திருவுளச்சீட்டு 1909-ஆு மார்ச்சுமீ 15௳ மாலை 4-மணிக்கு ரங்கோன் சந்தாநேயர்கள் முன்னிலையில் ஸ்ரீமான் ராய்பாதூர் பே. மா. மதுரைப்பிள்ளையவர்கள், ஹைஸ்கூல் ஹாலில் எடுக்கப்படும். இது உறுதி. ஆதலால் ஜாக்கிரதை.

சந்தாவிகிதம்.

இந்தியா, பர்மா, இலங்கைக்கு தபாற்செலவுட ரூ.	ரூ. 3—0—0
சிங்கப்பூர் முதலிய பிறதேசங்களுக்கு	3—12—0

தனிப்பிரதி அணா 5. இல் பா

விளம்பர விகிதங்களின் விபரம் 25-வது பக்க ... தலியவை ... ர்க்கவும்.

கடிதங்கள், விஷயங்கள், புஸ்தகங்கள், விளம்பரங்கள் ... வ பின்கு ... திற்கு அனுப்பப்பட வேண்டும்.

... னஜ ...

மா ... ிதபே ...

"ரங்கோன் ரஞ் ... 2. க ...

ரங்கோன் ரஞ்சித போதினி.

பழயன கழிதலும் புகுதலும் — வழுவல கால வகையி னானே.

யாவர்க்கும் சுக செல்வ நன்மைகளையும்
சுகிர்த பாக்கிய பொக்கிஷத்தையும் நீடூழி பெருகுவிக்கும்
ஓர் நவீன தமிழ் இங்கிலிஷ் மாதாந்த பத்திரிகை.

Vol. I. பருவம் 1. — 1908-௵ டிசம்பர்-௴ 1௳ — No. 1. இலக்கம். 1.

இப்பத்திரிகையின் நோக்கம்

தென்னிந்தியாவிலும் தமிழ் வழங்கும் பர்மா முதலிய பிறவிடங்களிலும் அநேக தமிழ்ப்பத்திரிகைகள் இப்போது நடை பெற்றுவருகின்றன. அவற்றுள் அநேகம் பெரும்பாலும் அப்போதைக்கப்போது நிகழும் சமாசாரங்களடங்கிய பத்திரிகைகளாகவே யிருக்கின்றன. தற்காலத்திய சமாசாரங்களை அறியவேண்டியது அத்தியாவசியமேனும், அவை நவீனமாக முதலில் வெளியாகும் போது மாத்திரம் வாசிப்போர்க்கு விருப்பத்தை நல்குமேயன்றி, மறுதினம் பழங்கதையாய் முடிந்து நிரந்தரமான பயனைத்தரா. அத்தகைய பத்திரிகைகளும் அவசியமே யாதலின், அவை யாவுந்தழைத் தோங்குக.

ரங்கோன் ரஞ்சித போதினியென்னும் இப்பத்திரிகையில் எழுதப்படும் விஷயங்களோ-நிரந்தரமான பயனைத்தந்து வாசிக்குந்தோறும் வியப்பையும், அறிவு விளக்கத்தையும், மேன்மேலும் அவை போன்ற அருமைகளை யறியவேண்டுமென்னும் மனவெழுச்சியையும் உண்டாக்கத் தக்கனவென்பதும், "நின்னாற்றலறிவிக்கும் நின்னரிய படைப்பே" என்றபடி, அகிலலோக காரண கர்த்தாவாகிய கடவுளது வரம்பிலாற்ற லுடைமையை அவரால் சிருட்டிக்கப்படும் சேதனாசேதனப் பிரபஞ்ச விசித்திரங்களை விளக்க வல்லன வென்னும் வாய்மையினைப் புகட்டத்தக்கன வென்பதும் அனுபவத்தால் விளங்கும். சில பத்திரிகைகள் ஆரம்ப சூரத்துடன் அருமையான விஷயங்களைக் காட்டிப் பிறகு நாளாவட்டத்தில் சாமானிய விஷயங்களிலிறங்கிச் சுவைகுன்றிப் போவதைக் காண்கின்றோம். அத்தகைய "சென்று தேய்ந்திறுதல்" என்னுங் குற்றம் இப்பத்திரிகைக்கு எந்நாளும் நேரிடாவகை நூதனமான அரிய பெரிய விஷயங்களை வெளியிடுவதே இப்பத்திரிகையின் கருத்தாகும்.

சந்தாதாரர்களை நாடிவரும் பத்திரிகையானது அவர்களுக்கு ஒரு நண்பனைப்போன்றது. பிரதமத்திலே பெரிதாகவும், அதிக சுவையுடையதாகவுங் காட்டிப் பிறகு நாளடைவில் குன்றிப் போகும் நட்பு உண்மையில் நட்பாகாது. ஆரம்பத்திலே சிறிதாகவும், குன்றிய சுவையுடையதாகவுந் தோன்றி நாளடைவிலே விர்த்தியடையும் நட்பே நட்பாகும்.

> "கனைகடற்றண் சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
> நுனியிற் கரும்பு தின்றற்றே—நுனி நீக்கித்
> தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
> ஈரமிலாளர் தொடர்பு" நாலடியார்.

(ஒலிக்கின்ற குளிர்ந்த கடற்கரையையுடைய அரசனே! விதி விலக்குகளைக் கற்றறிந்தவர்க

ளது நட்பானது, மேல் நுனி தொடங்கி அடிவரையில் கரும்பைத் தின்னும்போது தின்னத் தின்னச் சுவைமிகுந்துகொண்டே வருவதுபோற் பெருகும். நற்குணமும் உள்ளன்பு மில்லாதவர்களுடைய நட்பானது அக்கரும்பை அடியினின்று நுனிவரையில் தின்னும்போது தின்னத் தின்னச்சுவை குன்றிக்கொண்டே வருவதுபோற் குறைவுபடும்.) என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். இப்பத்திரிகையென்னும் மித்திரனுடைய நட்பும் கற்றறிந்தார் கேண்மைபோல், "நுனியிற் கரும்பு தின்றற்றே" என்று சந்தாதாரர்கள் வியந்து பயனடையுமாறு திருவருள் முன்னிற்றல் வேண்டுமென்றும், இதுபோன்ற ஏனையப் பத்திரிகைகளும் உலோகோபகாரார்த்தமான சாதகங்களாயிருந்து தழைதல் வேண்டுமென்றும் சர்வலோக சரண்யராகிய ஜகதீசரைப் பிரார்த்திக்கின்றோம்.

நமது தேசத்திலே ஆங்கிலேய பாஷையிற் பயின்று, உயர்தரக் கல்விச்சாலைகளிலாவது சர்வகலா சாலைகளிலாவது மனோதத்துவ சாஸ்திரம், பதார்த்தசொரூபலட்சண சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், பூதபௌதிக சாஸ்திரம், தாவர சாஸ்திரம், தேகதத்துவசாஸ்திரம், நீதி சாஸ்திரம், வானசாஸ்திரம், மிருகபட்சி லட்சணசாஸ்திரம், வியவசாயசாஸ்திரம், தேகசுகாதார சாஸ்திரம், வைத்தியசாஸ்திரம் முதலியவற்றைச் சாங்கோபாங்கமாய் வாசித்துத் தேர்ச்சியடைந்து வித்தியாபட்டம் பெற்றவர்களை யெல்லாம் தொகுத்துக் கணக்கிட்டுப் பார்த்தால், அவர்களின் தொகை மொத்த ஜன சங்கைக்கு பத்துக் கோடியிலொரு கூறுமில்லையே யென்று துக்கிக்காதவர் யாவர்! அச்சிறு பான்மையோரிலும் அநேகர் தத்தம் லௌகீகம் முதலிய விவகாரங்களினாலும், ஏனையோர்க்குத் தாம் கற்றுணர்ந்த அரியவிஷயங்களை யெடுத்துரைப்பதற் கேற்ற சுயபாஷா ஞானமும், அவகாசமும், சொல்வன்மையும் அமையப் பெறாமையினாலும், அவர்கள் கற்ற கல்வி அவர்கட்கே பயன் படுவதே யன்றித் தம் நாட்டவர்க்குப் பயன்படாதொழிந்து, கேவலம் தாங்கள் லௌகீக சாமர்த்தியங்களினால் பொருள் சம்பாதிப்பதற்கு மாத்திரம் உபயோகமாகின்றது. ஆதலால் அவர்களால் பயனடைவோர் அவர்கள் குடும்பத்தாரேயன்றி வேறு எவருளர்? ஆங்கிலேய பாஷையிற் பயிலப்பெறாத நம்மனோராகிய கோடானு கோடி ஜனங்களில் பெரும்பான்மையோர் பொருள் தேடுவதற்கேற்ற லௌகீக விவகாரங்களிலேயே தத்தம் காலத்தைப் போக்குகின்றனரேயன்றி, அறிவு விளக்கத்திற் கேற்ற அரிய பெரிய விஷயங்களை அவகாசம் நேரிடும் போதாவது தெரிந்து கொள்வதற் கேற்ற நூல்களை வாசிப்போமென்னும் எண்ணங் கொள்வது கிடையாது. அவர்களுட் சிலர்க்கு அவ்வகை விருப்பமிருக்கினும், அவர்களுக்குத் தெளிவாகவும், சுலபமாகவும், மேற்போந்த சாஸ்திரக் கருத்துக்களை எடுத்துரைக்கத்தக்க நூல்கள் சுதேச பாஷைகளில் தற்காலம் கிடையா.

இக்குறையைப் பரிகரிக்கும் பொருட்டே மானிட மர்ம சாஸ்திரம் என்னும் நூலை வெளியிட்டது மன்றி இப்பத்திரிகையினையும் நடத்தத் தொடங்கலாயிற்று. ஐரோப்பா, அமெரிக்கா முதலிய பிரதேசங்களிலே அநேக வித்வ சிரோமணிகள் தம் சுய நலத்திற்காக வேறு லௌகீக தொழில்களையும் நாடாது சங்கங்களேற்படுத்தி ஏராளமாய்ப் பொருள் செலவிட்டுப் போதனா சாலைகளை யமைத்து மேற்போந்த அநேக சாஸ்திர உண்மைகளைக் கண்டறிவதும், கண்டறிந்தனவற்றைக் காட்சி, அனுமானம் முதலிய பிரமாணங்களினாற் பரிசோதிப்பதும், அப்பரிசோதனைகளுக்குக் கலையாமல் நிற்கும் உண்மைகளை உடனே உலகத்தார்க்குப் பலமுகத்தாலும் பிரசுரித்து நன்மை புரிவதுமே தங்களுடைய வாழ்க்கையின் பெருங்கடமை யெனக் கங்கணம் பூண்டிருக்கின்றனர். அத்தகைய சாஸ்திர விற்பனர்—

"அன்பிலா ரெல்லாந் தமக்குறிய ரன்புடையார்
என்பு முறியர் பிறர்க்கு" குறள்.

(அன்பற்றவர்கள் உலகத்திலுள்ள வெல்லாம் தமக்கே யுரியன. தாமே அனுபவித்துச் சுகமடைவதற் குரியரென்று நினைப்பார். அன்புடையவர்களோ தம் எலும்பும் தம்முடையதல்ல, அது பிறர்க்குப் பயன்படுமாயின் அவர்க்கே யுரியது என்று கருதுவார்.) என்னும் தெய்வப் புலவரது திருவாக்குக்கு நிதரிசனமாயிருக்கின்றனர். பரோபகார சிந்தையும், தத்துவ சாஸ்திர விசாரவாஞ்சையும், பூரணமாயமையப் பெற்ற சில ஐரோப்பிய அமெரிக்க சாஸ்திரிகள் தாம் இறக்கும் போது தம்முடைய சொத்துக்களின் பெரும்பாகத்தைச் சாஸ்திரவிசாரணா சங்கங்களுக்கென்று ஏற்பாடு செய்வதேயன்றி, இன்ன இன்ன வைத்தியசாலையிலோ அல்லது தேகதத்துவ சாஸ்திர கலாசாலையிலோ கல்வி

பயிலும் வித்தியார்த்திகள் மானிடதேக அகத்துறுப்பின் பரிசோதனை செய்வதற்கும், அதனாலடையத்தக்க அறிவு விளக்கத்துக்குமே உபபோகமாகும்படி, தம்முடைய உறவினர் தமக்குச் செய்யவேண்டிய பிரேதச் சடங்குகளை நடத்திய பிறகு தம் பிரேதங்களைக் கொடுத்து விடவேண்டுமென்றும் எழுதிவைக்கின்றார்கள். உயிரோடிருக்கும் போது உலகத்தார்க்குப் புரிந்த நன்மைவரையில் திருப்தி யாகாமல் இறந்தும் தம் பிரேதங்களினால் பிறர்க்கு நன்மைபுரியும் அப்பெருந்தகைமை யுடையோரை நாம் மறக்கற் பாலதோ? அத்தகையோர் இரவும் பகலும் அயர்விலாவூக்கத்துடன் பாடுபட்டுக் கண்டறிந்த அரிய விஷயங்களையே மொழிபெயர்த்து யாவர்க்கும் எளிதில் விளக்கவேண்டுமென்பதே இப்பத்திரிகையின் நோக்கமாகும்.

இப்பத்திரிகையை நடத்திப் பொருளீட்டவேண்டுமென்னும் எண்ணஞ்சிறிதுமின்றி, இதில் வரும் அநேக அரிய விஷயங்களுக்கு நிதரிசனமாக உருவப்படங்கள் முதலியவைகளை இங்கிலாந்திலிருந்தே வரவழைத்தல், அமெரிக்கா, ஜெர்மனி, பிராஞ்சு முதலிய இடங்களிலுள்ள தேகதத்துவ சாஸ்திர ஆராய்ச்சி சங்கங்களால் கண்டு பிடிக்கப்பட்ட நூதனமான அரிய பல விஷயங்களை யாவர்க்கும் விளங்கக்கூடிய இனிய நடையில் எழுதியனுப்புவோர்க்குத் தகுந்தபடி பரிசளித்து ஊக்க மூட்டல் முதலியபெருங் காரியங்களைப் புரிந்து சந்தாதாரர்களை களிப்புறச் செய்யவேண்டு மென்பதே பத்திராதிபருடைய கருத்தாகும்.

சர்வகலாசாலைகளிற் பயின்ற ஆங்கிலேய விற்பனர்களாகிய நம்மனோரும் இப்பத்திரிகையை வாங்கி ஆதரிக்கக் கடமைப் பட்டவர்களேயாம். ஏனெனில் தாங்கள் தமிழில் மேன்மேலும் அபிவிர்த்தி யடைவதற்கும், பாலியத்தில் கற்றுணர்ந்த விஷயங்களை அகமகிழ்வுடன் நினைப்பூட்டிக்கொள்வதற்கும், அரிய சாஸ்திரக் கருத்துக்களை வேறுவகையினாலறிந்துகொள்ள முடியாமல் அஞ்ஞானாந்தகாரத்திலிருக்கும் தம் மனைவிமார், சகோதரிகள், புத்திரிகள் முதலிய சீமாட்டிகள் அரிய உண்மைகளை அறிந்துகொள்வதற்கும் இது தக்கதோர் கருவியாயிருக்குமாகையாலென்க. ஆகையால் இதனை இடைவிடாமல் ஆதரித்துவருவது தமிழர்களில் ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய ஒவ்வொருவருடைய கடமையாயிருக்குமென்று நம்புகிறோம்.

இதுவரையிலே முன்னறிக்கைப் பத்திரிகையோடே தோன்றாமலே நின்றுவிட்ட பத்திரிகைளைப் பற்றியும், தோன்றியும் அன்றே மறைந்த பத்திரிகைளைப்பற்றியும், சில மாதங்கள் வரையில் தளர்நடைப் பருவத்திலிருந்து வீழ்ந்து மறைந்த பத்திரிகைகளைப் பற்றியும், தோன்றி மறைந்து மீண்டும் தோன்றி ஊனக்காலோடு செல்லும் பத்திரிகைகளைப் பற்றியும் கேள்விப்பட்டுப் பெருந் துக்கமடைகின்றோம். இத்தகைய அதிருப்திகரமான நிலைமைக்குக் காரணமெல்லாம் சந்தாதாரர்கள் ஆதரிப்பதின்றிச் சந்தாத் தொகைகளைக் காலக்கிரமப்படி அனுப்பாமையேயாம். இங்கிலாந்து முதலிய தேசங்களில் அளவிறந்த பத்திரிகைள் இலக்ஷக்கணக்காக நாடோறும் பிரசுரமாகி அவற்றிற்குரியவர்கள் கோடீசுவரராகின்றனர். அப்படிப்பட்ட எண்ணம் நமக்குக் கிடையாது. அது இத்தேசத்தில் "முடவன் கொம்புத்தேனுக்கு இச்சிப்பது போலாகும்." இப்பத்திரிகைக்கு வேண்டிய இன்றியமையாத செலவுக்குமாத்திரம் கிரமமாகச் சந்தாதாரர்கள் கிடைத்துவருவதே போதுமென்று நாம் திருப்தியடையும் இயல்புடையோம். இங்கிலாந்து முதலிய பிறதேசங்களில் குடிக்கூலி வண்டிக்காரர்கள், நாவிதர், சக்கிலியர், வண்ணார் முதலிய சாமானியரும் தத்தம் சக்திக்கேற்றவாறு பத்திரிகைகள் வாங்கிப் பயனடைகின்றபடியால் அத்தேசவாசிகள் நாகரீகம் மிகுந்து உன்னதமான நிலைமையிலிருக்கின்றனர். நம் நாட்டவர்களும் அவ்வாறாக வேண்டுமென்னும் நன்னோக்கமே இப்பத்திரிகையின் நோக்கமாகும். இதனை இடையூறின்றி ஈடேற்றுமாறு ஜகதீசரைத் தியானிக்கின்றோம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

தண்டா மரையி னுடன்பிறந்துந் தண்டே னுகரா மண்டூ
[கம்
வண்டே கானத் திடையிருந்து வந்தே கமல மது
[வுண்ணும்
பண்டே பழகி யிருந்தாலும் அறியார் புல்லோர் நல்
[லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற் கலப்பர் கற்
[றோரே.

தவளையானது தன்னுடன் பிறந்து வளர்ந்திருக்குங் குளிர்ந்த தாமரையிலுள்ள தேனை உண்ண வறியாது காட்டிலிருந்த வண்டுகளோ வந்து அந்த மதுவை யுண்டு களிக்கும். (அதுபோல) நெடுநாள் பழகியிருக்கினுங் கற்றோர் அருமையை அறிவிலா ரறியார் கற்றவரே அறிவார்

மனோவசிய சாஸ்திரம்.

நம் முன்னோர் தலைமுறை தலைமுறைகளாக மாந்திரீகமென்றும், கண்கட்டுவித்தையென்றும், வசிய சாஸ்திரமென்றும் பற்பல நாமம் புனைந்த மிக்க அருமையான விஷயங்களைக்கற்று அவற்றின் மூலமாய்ப் பேய் பிசாசுகளைத் துரத்துவதும், நோய் நொம்பலங்களை நீக்குவதும், மானிடர் ஆச்சர்யப் பிரமைகொண்டு திகைக்கத்தக்கவண்ணம் அநேக அரிய காரியங்களைச் செய்வதுமாயிருந்தார்கள். ஆனால் தாமறிந்ததை மற்றவர்கள் அறிவதனால் தம்மைப்பற்றிய மதிப்புக்குறைந்துபோகுமென்ற எண்ணத்தினாலோ, அல்லது தாமறிந்ததை மற்றவர்களுக்குச் சொல்வதால் தமது பிழைப்புக் கெட்டுப்போகுமென்னும் எண்ணத்தினாலோ தமதறிவை மற்றவர்களுக்குஉபயோகப்படும்படி செய்யவேண்டுமென்கிற எண்ணம் நம்மவர்களுக்குள் உண்டாவதில்லை. முடிவில் அவரவர் தாம் தாமே கற்றுக்கொண்ட அருமையிலும் அருமையான சில அரும் பெரும் விஷயங்கள் அவரவர்களோடேயே மாண்டு மண்ணில் மறைந்துபோகின்றன.

அந்நிய தேசத்தவர்களாகிய ஆங்கிலேயர்களோ எக்காலத்திலும் எவ்விடத்தும் எவ்வளவுங்குறைவுபாடின்றி விடா முயற்சியுடன் நமது சாஸ்திரங்கள் மூலமாகவே பலகோடிவிஷயங்களை பாண்டித்யம் செய்துகொண்டு அவற்றைப் பத்திரிகைவாயிலாகவும் புஸ்தக ரூபமாகவும் பிரசுரஞ்செய்து உலகமெங்கும் பரவும்படி செய்கின்றனர். அதனால் அவர்கள் வாழ்வடைவதுமன்றி உலகத்தோரும் நன்மையடைகின்றனர். அவ்வித சாஸ்திரங்களிலொன்று மனோவசிய சாஸ்திரமேயாகும். இச்சாஸ்திரத்தின் அருமையை மர்மமாக மறைத்து வைத்துக்கொண்டு உபயோகிக்கும்பொருட்டு நம்மவர்கள் பலவித பொய்யையும் பித்தலாட்டத்தையுஞ் சொல்லி உலகத்தவரை ஏமாற்றி வருகின்றனர். உதாரணமாகப் பேய் பிசாசு குட்டித்தேவதைகள் முதலியவற்றின் அநுக்கிரகத்தால் தாம் அநேக அற்புதங்களைச் செய்வதாகப் பாராட்டி வந்தனர். மணிமந்திரஞ்செய்தும, எண்ணெயை, ஜலத்தை, விபூதியை மந்திரித்தும், திம்மன், பொம்மன், காட்டேரி பிடாரி, ஊர்காலமாடன், பத்திரகாளி, சூலி, சாமுண்டி, முனியன் முதலிய பலவிதமான தெய்வங்களுக்குத் தேங்காயுடைத்து ஆடு கோழிகளை வெட்டிப் பலிகொடுத்து கர்ப்பூரங் கொளுத்திச் சாராயங்களைப் படைத்து பலகாரந் தோசைகள் வாழைப்பழம் முதலியவற்றைப் படைத்து மாவிளக்கேற்றிப் பலபிரார்த்தனைகள் நேர்தலைகள் செய்தும், இன்னும் இவைபோன்ற பற்பலவினோதகர்மங்கள் புரிந்தும், கோடாங்கி குறிகளினாலும், குழையடித்தல் முதலியவற்றாலும் வியாதிகளை சொஸ்தமாக்கியும் பேய் பிசாசுகளை யோட்டியும் நன்மைசெய்து வருவதையும் நாம் கண்டும் கேட்டு மிருக்கிறோம். ஆனால் அதே அப்பியாசங்களை நம்மவரிடமிருந்து கற்ற ஆங்கிலேயர் அவற்றின் உண்மையைத் தெளிவாக விளக்கிக் காண்பித்து பேயுமல்ல, பிசாசுமல்ல, நம்முடைய மனதே பலவித தோற்றங்களுக்கும் மூலாதாரமென ரூபித்திருக்கின்றனர்.

இன்னும் நம்மவர்கள் சுயசுக சொகுசை நிராகரித்து லோகோபகாரார்த்தமான காரியத்தைச் செய்யப் பிரியமும் விசேஷ ஒற்றுமையும் உண்டானாலொழிய நம் நாட்டிற்கு நாகரீகமும் செல்வமும் பெருமையும் மலிந்து வறுமை குறையாதென்பது திண்ணம். சர்வரோகங்களையும் நிவாரணஞ் செய்து நமது தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் புத்திக்கு தீக்ஷணியத்தையுங் கொடுக்கும் சக்தி நமது உள்ளத்தினிடத்திலேயே இருக்கின்றது. இந்த மனோசக்தியின் சூக்ஷமத்தை அறிந்தவர்கள் பிறருக்குண்டாகும் ரோகங்களை நிவர்த்திப்பதுடன் தமக்கும் நோய் வந்தால் ஔஷதப் பிரயோக மின்றியே தீர்த்துக்கொள்ளும் சக்தியுடையவர்க ளாவதுடன் தமதுள்ளிருக்கும் மனோசக்தியின் பூரணமகிமையையும் வலுவையும் அறிந்திருப்பவர்களானதால் மற்றவர்களைத் தமதிஷ்டத்திற் கிணங்கச் செய்யவும் தைரிய வீரிய சம்பன்னராய் அவர்களை அடக்கி யாளுந் தன்மையையும் அடைவார்கள். நாம் மனோவசிய சாஸ்திரத்தைக் கற்றுச் சில வருஷங்களாக அப்பியாசித்துவரும் விஷயங்களை யாவர்க்கும் பிரயோஜனப்படும்படி சுருக்கமாயும், விவரமாயும் எளிய தமிழ் நடையில் விளக்கும்படி எழுத உத்தேசித்திருக்கிறோம். பகவான் முன்னின்று எமக்குப் போதுமான சுகத்தையும் ஞானத்தையும் அருள்வதுடன், ரஞ்சித போதினியும் நீடூழி நிலைக்கத்தக்கதாகப் போதுமான சந்தாதாரர்கள் முன்வந்து உதவிபுரிய கடாக்ஷிப்பாராக.

அடுத்த பத்திரிகையில் வசிய மர்மத்தைப்பற்றிச் சித்திரப்படத்துடன் எழுதி விளக்குவோம்.

தீர்க்காயுள் ஓங்கும்வழி.

நமது ரத்தத்தில் வர்ண மற்ற வெண்குறுகடங்கள் (White corpuscles) உண்டு. அவை இளைஞர்களிலும் கர்ப்பஸ்திரீகளிலும் வியாதியஸ்தர்களிலும் அதிகமாயிருக்கும். ஆனால் வயோதிகப் பருவத்தில் அவை குறைந்துவிடும். அவற்றின் தொழில் யாதெனில், ரத்தத்தில் வந்து கலக்கக்கூடிய விஷம், விஷக்கிருமிகள், Bacillus) முதலியவற்றோடு எதிர்த்துப் போராடி அவற்றைப் பட்சித்து விடுவதே. அண்ட புவன சராசரங்களைப் படைத்துக் காத்து வருகின்ற அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபி, நமது சரீரத்தைத் தாக்கும் சகலவித எதிரிகளோடும் போராடி ஜெயித்து நம்மைப் பேணிக்கரிக்கும் யுத்தவீரராக இவைகளைச் சிருஷ்டித்து நமது உதிரத்தில் வைத்திருக்கிறார். சரீரத்தின் ஒவ்வொரு அவயவங்களையும் ஊடுருவச் செல்லும் இரத்தந் தாரைகளின் வழியாய் இவை சென்று சரீரத்தைக் காக்கின்றன. உதாரணமாக, ஒருவன் கைகால்களில் காயம்பட்ட இரண்டொரு தினங்களுக்குள் அந்த ரணத்தைச் சுற்றி வெண்மை நிறமான ஓர் வஸ்துத் தோன்றும். இவைதான் ரத்தத்தின் வெண்குறுகடங்கள். கலகமுள்ள ஸ்தலத்தில் யுத்தவீரர்தோன்றுவது போல், அபாயக் குறிகளுள்ள இடங்களில் இவை தோன்றி எதிரிகளோடு போர்செய்யக் காத்துக்கொண்டிருக்கின்றன. ரணம் ஆறும் சமயம் இவை மறைந்துவிடும். ஆகவே, வெண்ணிறம் மாறிய ரணம் சீக்கிரம் ஆறிவிடுமென வைத்தியர் கூறுவர்.

பிளேக், வைசூரி முதலிய நோய்களை யுண்டாக்கத்தக்க விஷக்கிருமிகள் தேகத்தினுட் செல்லும்போதும் இந்த வெண் குறுகடங்கள் அவற்றோடு போர்செய்து ஜெயித்துவிடின் நோய் வராது. ஆனால் சக்திக்குறைவு, தொகைக் குன்றவு முதலிய பல காரணங்களால் அவை தோல்வியடைய நேரிடின் மேற்கூறிய விஷநோய்கள் தொற்றிக்கொள்ளும். ஆகவே இந்த வெண் குறுகடங்கள் ஒருவன் சரீரத்தில் ஏராளமாயும் உறுதியுள்ளவைகளாயும் நிறைந்திருக்குமாயின் அவனுக்கு மரணம் உண்டாகமாட்டாது.

பாரீஸ் நகரத்தில் Pasteur Institute லுள்ள Dr. Metchnikoff என்பவரும், "ஓர் காலத்தில் ஆயுள் விர்த்தியாகும் வழி வெளியாகலாம். ஆனால் அதற்கு முன் விருத்தாப்பியம் நேரிடுவதன் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்று சொன்னதுடன், நமது உதிரத்திலுள்ள வெண்குறுகடங்கள் விர்த்தியாகவும், அவற்றிற்கும் நமக்கும் சத்துருக்களாகிய விஷக்கிருமிகள் குறைவு படவுந் தக்கதாக நாம் எந்த வஸ்துவையும் பச்சையாகச் சாப்பிடக்கூடாதென்றும், பழங்கள் முதல் சகல வஸ்துக்களையும் வேகவைத்தே சாப்பிட வேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்.

சில நாட்களுக்கு முன் ஜெனிவா என்ற இடத்தில் வைத்திய சங்கத்தின் பத்தாவது உற்சவம் நடந்தது. அதில் Dr. Doyen என்பவர் ஆயுள் விர்த்தியைப் பற்றி ஓர் உபந்நியாசஞ் செய்தார். அவர் சொல்லியது யாதெனில், "தற்காலத்திய ஸ்திரீ புருஷரும் பூர்வீக மனுஷரைப்போல் நெடுநாள் ஜீவிக்கும் வழிகளுண்டு. ஒவ்வொருவரும் தமது ஆயுள் அநேக நூற்றாண்டுகளுக்கு ஓங்கி வளரத்தக்க விஷயங்களைச் செய்வது சாத்தியமே. நமது சரீரத்தினுள் புகும் விஷங்களையும் விஷக்கிருமிகளையும் நீக்கக்கூடிய ஏதுக்களைத் தேடிக்கொள்வதனால் ஆயுள் ஓங்கும். ஜலதோஷம், இருமல் முதலியவை யுண்டாகாமல் தடுக்கும் வழிகளுமுண்டு என்பதே" அவர் கண்டுபிடித்திருக்கும் ஜலதோஷநிவாரணிக்காக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

சாஸ்திரா ராய்ச்சி சங்கம்

அமெரிக்காவில்பிலதெல்பியா (Philadelphia) என்ற நகரில் அநந்தம் டாக்டர்கள் சேர்ந்து ஆராய்ச்சிவைத்தியசாலை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் ஏறக்குறைய ஐம்பதினாயிரம் சீமை வெள்ளெலிகளை வளர்க்கிறார்கள். அவற்றிற்கென்று ஓரலங்கார மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. அதில் ஏறக்குறைய நூறு எலிகளுக்கு ஒவ்வொரு அறையுண்டு. அவ்வறைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருதாதி அந்த எலிகளை பற்பல கூண்டுகளில்வைத்து டாக்டர் சொன்னபிரகாரம் பற்பல விதமான ஆகாரங்கள் குறித்த நேரங்களில் குறிக்கப்பட்ட அளவுப்பிரகாரம் கொடுத்து வருகிறாள். இவ்விதமாய் வளர்க்கப்பட்ட எலிகளில் ஏறக்குறைய 500 பிரதிதினமும் அறுத்துச் சோதிக்கப் படுகின்றன. இவ்விதமாய் ஆராய்ச்சிசெய்து கண்டு

பிடித்த விஷயங்களை மூன்று மாதத்துக் கொரு தடவை புஸ்தகரூபமாய் வெளியிடுகின்றனர். இதுபரியந்தம் அவர்கள் கண்டுபிடித்திருக்கும் விஷயம் யாதெனில் [1] சீமை வெள்ளெலிக்கும் மனுஷனுக்கும் ஊண்முதலிய அநேக விஷயங்களில் ஒற்றுமையிருப்பதால் அவைகளே ஆராய்ச்சிக்குத் தகுந்த ஜெந்துக்கள். [2] ஒவ்வொரு கர்ப்பிணியும் ஆகாரத்தைக் கிரமப் படுத்திக் கொள்வதால் சிசுவானது வயிற்றிலிருந்து வெளியேறும்வரை சிறுத்திருக்கச் செய்யலாம். இப்படி செய்வதால் பேறுகாலத்தில் கஷ்டமிராது. குழந்தை பிறந்தபின்பு தாய்க்கு வேறு விதமான ஆகாரங் கொடுத்துக் குழந்தையைப் புஷ்டியாக்கிக் கொள்ளலாம். இவ்விதமாய் தாய்க்கும் பிள்ளைக்கும் உயிர்ச்சேதம் நேரிடாதபடி செய்யலாமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இன்னும் தமதிஷ்டப்படியே ஆண் அல்லது பெண் சிசுவை ஜெனிப்பிக்கலா மென்றும், குள்ளமான பெற்றோர்க்குப் பூரண வளர்த்தியுடைய பிள்ளைகள் பிறக்கச் செய்யலாமென்றும், ஷெ டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இதை ஆராய்ச்சி செய்யும்படியாயும், தமது ஜனங்கள் குள்ளமாயிருப்பதை நிவிர்த்திக்கும் வழிகளைப் படித்துக் கொண்டு வரும்படியாயும் ஜப்பான் சக்ரவர்த்தியும் சில டாக்டர்களை அனுப்பியிருக்கிறாராம். இன்னும் அவ்விடத்தில் நடக்கும் விஷயங்களைப் பற்றிய ரிப்போர்ட் வந்து சேர்ந்தவுடன், "ரஞ்சித போதினியின்" வாயிலாய் நமது நேயருக்குத் தெரிவிப்போம்.

விசித்திர விஷய விளக்கம்.



Water-spouts மேகஸ்தம்பம்.

1. மயிர்மழை.

சில மாதங்களுக்குமுன் ரங்கூனைச் சுற்றி ஏறக்குறைய 30-மைல் தூரத்துக்குள் குதிரை முடிகளைப்போன்ற ஒரு அங்குலம்முதல் ஒன்று, ஒன்றரை அடிநீளம் வரையுள்ள மயிர்கள் பல விடங்களிலும் பரவிக்கிடந்ததைப் பலருங்கண்டு பொறுக்கிப் பந்தோபஸ்து செய்தார்கள். அவற்றில் சில நம்மிடத்திலு மிருக்கின்றன. இந்த முடிகள் முந்தின நாள் பெய்த மழையோடு கீழே விழுந்ததாகப் பலரும் அனுமானிக்கின்றனர். அது அசாத்தியமன்று ஆனால் முடிகள் மேகங்களுக்கு எவ்விதம் சென்றிருக்கக் கூடுமென்று சிலர் சந்தேகிக்கலாம். மேற்காண்பித்திருக்கும் சித்திரப் படத்தினால் இவ்விசித்திர விஷயம் எளிதில் விளங்கும். இவ்வித மேகஸ்தம்பங்கள் உண்டாவதை சிறிது விளக்குவோம்.

இதைச் சாதாரணமாய் ஜனங்கள் "மேகம் நீர் மொள்ளுகிறது" என்று சொல்வார்கள். அகோரப் புசல்காற்றடிக்குஞ் சமயத்தில் ஏகமாயிருண்ட கார் மேகம் ஆகாயத்தை அளாவிநிற்கும். அதிலிருந்து ஓர் பாகம் தூண்போல் கீழிறங்கி, வரவர அளவிலும் நீளத்திலும் வளர்ந்துகொண்டேபோகும். அதேகாலத்தில் புசல்காற்றினால் சமுத்திரத்தின் அலைகளும் மும்முரமாய்க் கொந்தளித்து எழும்பும். இவ்விதமாய்க் கொந்தளித்த அலையில் மேகத்தூண் ஒன்றித்து வரவரப் பெரிதாகி புசல்காற்றோடு நகர்ந்து செல்வதைக் காணலாம். இவ்விதத் தூண்கள் பல ஏககாலத்தில் இறங்கி அவற்றின் மூலமாய் சமுத்திரத்தின் ஜலம் ஆகாயத்தில் சென்று மேகத்துடன் கலந்துவிடுகிறது. இவ்வித மேகஸ்தம்பங்களினால் கடல்களிலுண்டாகும் அபாயம் அநந்தம். இவைகள் சிறிதாயிருக்குமா

யின் கப்பல்களிலுள்ள பீரங்கிக் குண்டுகளினால் உடைத்து விடுவார்கள். ஆனால் கடல் கொந்தளிப்பா யிருக்குஞ் சமயத்தில் இந்த மேகஸ்தம்பங்களின் அருகில் செல்லுங் கப்பல்கள் நொறுங்கிப் போவதுடன் அவற்றிலுள்ள சாமான்களும் மேற்படி ஸ்தம்பத்தின் நடுவிலுண்டாகும் சுழலினால் மேகங்களுக்குச் சென்றுவிடுகின்றன. இவ்விதமாக குதிரைமுடி முதலிய சாமான்கள் ஏற்றிச்சென்ற ஏதோ ஓர் கப்பல் மேகஸ்தம்பத்தில் அகப்பட்டு நாசமாகி யிருக்க வேண்டுமென்றும், அதிலுள்ள குதிரை ரோமம் முதலியவை மேகஸ்தம்பங்கள் மூலமாக ஆகாயத்தில் சென்று மேகத்துடன் கலந்து மழைவருஷிக்கும்பொழுது பூமியில் அவைகளும் விழுந்திருக்கவேண்டுமென்றும் அனுமானிக்கப் படுகின்றது.

2. மீன் மழை.

சென்ற அக்டோபர்-மீ 25உ சனிக்கிழமையன்று சென்னையில் மதராஸ் கிளப்பில் மழை பெய்து விட்டவுடன் தரையைப் பார்த்தபோது சிறு சிறு பொடி மீன்கள் துள்ளிக்கொண்டிருந்தன. இம்மீன்கள் மேகத்திலிருந்து விழுந்திருக்க வேண்டுமேயொழிய வேறே வழியால் கிளப் காம்பவுண்டுக்குள் வரக்காரண மில்லையென்று தெரியவருகிறது.

3. ஜலமோகினி (The Mermaid.)

சில மாதங்களுக்குமுன் செங்கடல் தீரத்தில் ஒதுங்கி உயிரோடிருந்த ஓர் ஜலமோகினியைப் பற்றி பல பத்திரிகைகளிலும் கூறியுள்ளது. அதன் சிரசு ஸ்திரீயின் சிரசு, கூந்தலோ கறுத்து நீண்ட மிருதுவான பூங்குழல், கண்கள் கறுத்து அழகானவை. முகமோ புன்னகையுள்ளது. மார்புமுதல் இடுப்புவரை பெண்ணின் தேகமாயிருந்தது. இதற்குக்கீழ் மீன் தேகம் பச்சை வர்ணமாயிருந்தது. அது சில நிமிஷந்தான் ஜீவனோடிருந்தது. அதைப்பிடித்தவர்கள் பதனஞ்செய்து லண்டன் பட்டணத்துக் காட்சிசாலை (Museum) க்கு அனுப்பியிருக்கிறார்கள். இவ்வித ஜலமோகினியைப் பற்றிய சரித்திரங்கள் அனந்தம் பூர்வீக கிரந்தங்களிலுமுள்ளன. இவைகள் ஒவ்வோர் சமயங்களில் தோன்றி வரப்போகும் சங்கதிகளை முன்னறிவித்ததாகவும், சிற்சிலருக்கு அவரவர் கோரிய இஷ்டம் நிறைவேறும்படிசெய்து காப்பாற்றியதாகவும் வாசிக்கிறோம்.

மேலும், அவைகள் பூமியில் வந்து மனுஷருடன் சஞ்சரித்து ஸ்திரீ புருஷ சம்பந்தமாயிருந்து விட்டு கடலுக்குள் சென்றுவிடுவதாகவும், அவைநல்வாக்குக் கொடுக்கும்படிக்கு அவற்றிற்கு மனிதர் அநேகவித நன்கொடைகள் அளித்து தெய்வமாகப் பாவித்து வந்ததாகவும் வாசிக்கிறோம். 1660-ம் வருஷத்தில் ஒரு கப்பல் மாலுமி இவ்வித மோகினியைக் கடலில் கண்டதாகவும், அவர் சமீபிக்கு முன் அவள் மறைந்துவிட்டதாகவும் எழுதுகிறார். 1811-ம் வருஷத்தில் இங்கிலாந்திற்குத் தெற்கிலுள்ள (Isle of man) என்ற இடத்தில் குருவி வேட்டைக்குப்போன மூவர் பூனைக்குரல் போன்ற ஓர்வித அழுகைச்சத்தங் கேட்டுத் திரும்பிப் பார்த்தபொழுது இரண்டு மோகினி

களைக் கண்டார்களாம். சமீபத்தில் வந்தபொழுது அவைகளில் ஒன்று செத்துக் கிடந்ததாகவும், மற்றது அதன்பக்கமிருந்து அழுது கொண்டிருந்ததாகவும் கண்டு வெகு பிரயாசையுடன் உயிரோடிருந்ததை வலைபோட்டுப் பிடித்து இரண்டையுங் கொண்டுவந்து பலவிடங்களிலுங் காண்பித்து வெகுபணஞ் சம்பாதித்தார்களாம். அவைகள் ஏறக்குறைய நாலடி நீளமிருந்தனவாம். முடி ஐந்து அங்குலமிருந்ததாம். மீன் செதிள்களுமிருந்தனவாம். வாய் சிறியதாயிருந்த போதிலும் பற்களில்லையாம். உயிரோடிருந்ததற்கு ஆகாரம் வாளைமீன், நத்தை முதலியனவகளாம்.

விநோத வழக்க பழக்கங்கள்.

சுருட்டுப் பிடிக்கும் வகைகள்.

பர்மியர்களுக்குள் குடும்பச்சுருட்டு என்று ஒன்றுண்டு. அது மரத்தூள், சீனி, சிறிது புகையிலை முதலியவைகளைச் சேர்த்து ஒரு முரட்டு இலையில் சுற்றின ஏறக்குறைய 8 அங்குலம் நீளமுள்ள பெரும் சுருட்டாயிருக்கும். அதைக் கொளுத்தும் போதெல்லாம் ஒரு குடும்பத்திலுள்ள சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரை ஆண் பெண் ஒவ்வொருவரும் சிறிதுநேரம் மாறி மாறிப் பிடித்துக்கொள்வார்கள். தன் மார்பில் பால் குடித்துக்கொண்டிருக்கும் சிறு குழந்தைக்குங்கூட தாய் தன் வாயிலிருக்குஞ் சுருட்டைக்கொடுப்பது வழக்கம். வீதிகளில் சாமான் விற்றுக் கொண்டுபோகும் போதே பர்மாப்பெண்கள் இதே மாதிரியான பெருஞ் சுருட்டுகளைக் குடித்துக் கொண்டு போவார்கள்.

கோரங்கி நாட்டுப் பெண்கள் சுருட்டுப் பிடிக்கும் போது வாயில் உஷ்ணந் தோன்றும் படியாக சில சமயம் சுருட்டை மாற்றி நெருப்புள்ள பக்கத்தை வாய்க்குள் வைத்துக்கொள்வார்கள்.

மானிலா என்ற தீவில் ஒவ்வொரு குடும்பத்தாரும் வெளியே உலாவப் போகும்போது அவர்களில் சிறியோர் முதல் பெரியோர்வரை ஒவ்வொருவர் கையிலும் ஒரு சிகரட் காணலாம்.

ஜப்பான் தேசத்திலுள்ள பெண்கள் பத்து வயதிலேயே சுருட்டுப்பிடிக்கப் பழகி, ஆண்களைவிடப் பெண்களே அதிகமாய் சுருட்டை உபயோகிக்கிறார்கள். அத்தேசத்துப் பெண்கள் தங்களுக்குஇஷ்டமான ஆண்பிள்ளைகளுக்குத் தங்கள் நேசத்தைத் தெரிவிக்க வேண்டுமாகில் தங்கள் சுக்கானிலிருந்து வாய் நிறைய புகை யெடுத்து அதை அவர்கள் மேல் ஊதுவது வழக்கமாம். இன்னும் அங்குள்ள ஜாலவித்தைக்காரர் நாம் எப்படி ஒருவரோடொருவர் வார்த்தைகளினால் சம்பாஷிக்கிறோமோ, அதேமாதிரியாய்த் தங்கள் சுக்கான்களிலிருந்து வரும் புகையினால் வார்த்தையாடுவார்களாம்.

டாக்டர் பேலிக்ஸ் என்பவர், நீளமான சுருட்டை உபயோகித்தால் அதை திரும்பத் திரும்ப அநேகர்தடவை பிடிக்கவேண்டியிருக்கும். அப்படி அந்தச் சுருட்டைக் கொளுத்தும் போதெல்லாம் அதுகாய்ந்து அதனுள்ளிருக்கும் நர்காட்டின் என்ற விஷசத்துக்குறைந்து போகிறதென்றும், மற்றெல்லாச் சுருட்டுகளையும் போல ஹாவன்னா சுருட்டு அவ்வளவு விஷசத்துள்ளதல்லவென்றுஞ் சொல்லுகிறார். சுருட்டுப் பிடிப்பதால் கோபக்குணமுள்ளவர்களுக்கு அதிக கெடுதியுண்டாகுமென்றும் சாந்தகுணமுள்ளவர்களுக்கும், கடினவேலை செய்பவர்களுக்கும் அவ்வளவு தீங்கு நேரிடாது என்றும் வேறொரு டாக்டர் சொல்லுகிறார். சிலர் புகையிலைக்குப் பதிலாக வேறு இலைகளைச் சுருட்டிச் சுருட்டாகப் பிடிக்கிறார்கள்.

புகையிலையை உபயோகிப்பதனால் உண்டாகும் நஷ்டத்தைப்பற்றி நம்முடைய மானிட மர்ம சாஸ்திரத்தின் 478-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறோம்.

நரியின் தந்திரங்கள்.

வேட்டைக்காரர் நரியைத் துரத்தும் போது, அது கூட்டமாக மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுகளின் நடுவில் ஓடி

அங்குள்ள ஒரு ஆட்டின்மேல் ஏறி உட்கார்ந்து கொள்ளும். அதைக்கண்டு அது பயந்து ஓடும்போது மற்ற ஆடுகளெல்லாம் அதன் பின்னாலேயே ஓடும். வேட்டைக்காரர் ஆடுகளெல்லாம் மாண்டுபோகும் என்ற பயத்தினால் அதைவிட்டுப் போய்விட நரி தப்பிப் பிழைத்துக் கொள்ளுமாம்.

நரி தனக்கு ஆகாரம் ஒன்றுங்கிடையாமல் களைத்துப் போயிருக்குஞ் சமயங்களில் செம்மண் நிலத்தில் புரண்டு தன் தேகமெல்லாம் இரத்தவர்ணமாகத் தெரியும்படி வைத்துக்கொண்டு மூர்ச்சையடக்கி, தன் நாக்கை வெளியே தள்ளி தொங்கவிட்டு, செத்தபிணம்போல் பாசாங்கு பண்ணிக்கொண்டு கிடக்கும். அச்சமயத்தில ஆகாயத்தில் பறந்து போகும் பக்ஷிகள், கீழே ஏதோ செத்தபிணங் கிடக்கிறதென்று நினைத்து அதைத் தின்னும்படி அதன் மேல் இறங்கி உட்காரும் வேளையில் திடீரென்று அவைகளின்மேல் விழுந்து பிடித்துத்தின்று தன் பசியைத் தணித்துக் கொள்ளுமாம்.

அதிரச மஞ்சரி.

1. பணத்துக்கு எழுதுகிறது.

மகன். அம்மா! அம்மா! நான் படித்து வித்தியா பட்டம் பெற்றவுடன் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ் செய்ய யோசிக்கிறேன்.

தாய். அதென்னப்பா ?

மகன். பணத்துக்காக எழுதுகிறது. அம்மா!

தாய். நீ வித்தியாசாலைக்குப் போனநாள்முதல் வேறென்னத்திற்காகத்தான் எழுதியிருக்கிறாய் அப்பா ?

2. மகாராஜா.

அரசர்கள் அடிக்கடி வேஷம் மாறி தாம் யாரென்று மற்றவர்களுக்குக் காண்பிக்காமல் பிரயாணம் பண்ணுவதுண்டு. இவ்விதமாய் ஓர் ராஜன் ஒருநாள் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கையில் அவர் சவாரி செய்த வண்டியின் குதிரை சண்டித்தனம் பண்ணுவதை சகிக்காத பாகன் "போடா, மகாராஜா! போகமாட்டாயா?" என்றான்.

அப்பொழுது அவ்வரசன் பாகனைப்பார்த்து "நீ ஏன் உன் குதிரையை மகாராஜா என்றழைக்கிறாய்?" என்றார். அதற்கு அவன் "ஐயா! இது ஒன்றுக்கும் உதவாத துஷ்டக்கழுதை. வெறும் சோம்பேறியாதலால் மகாராஜா வென்றழைக்கிறேன்" என்றான். அப்பொழுது அவர், "ஓ! சரிதான்" என்று சொல்லிவிட்டு வேறு கேள்வி கேட்காமல் வாயை மூடிக்கொண்டு பிரயாணஞ் செய்தார்.

3. நீரல்ல ராஜா.

இத்தாலி தேசத்து ராஜா ஒருநாள் மலைச்சார்பிலுள்ள தமது கிராமங்களைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு போகையில் ஓர் கிழவி அவரை ராஜாவின் வேலைக்காரரில் ஒருவராகப் பாவித்துக்கொண்டு "அப்பா! முட்டை விலைக்குவேண்டுமா?" என்று கேட்டாள். அவர் அவளிடம் சில முட்டைகளை விலைக்கு வாங்கினார். அப்பொழுது அவள் "அப்பா! நீ ராஜாவை எனக்குக் காண்பித்துவிட்டால் இந்தமுட்டைக் காசைத் திருப்ப உனக்குத் தந்துவிடுகிறேன்." என்றாள். அப்பொழுது அவர் புன்னகையுடன் "ஓ! அது கஷ்டமல்ல நான்தான் ராஜா" என்றார். உடனே கிழவி அவரை உற்றுப்பார்த்து தலையை அசைத்துக்கொண்டு "நீரல்லராஜா, நீர் எவ்வளவு அசங்கியமா யிருக்கிறீர்! நான் ராணியைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் எவ்வளவோ ரூபவதி, அவர்கள் உம்மைப் போன்ற அசங்கிய முள்ளவரை விவாகஞ் செய்திருக்க மாட்டார்கள்." என்றாள். ராஜா சிரித்துக்கொண்டு "அதற்கு நான் என்ன செய்யட்டும்?" என்று சொல்லிவிட்டு தன் சட்டைச் சேப்பிலிருந்த ஒரு நாணயத்தைக் காண்பித்து, "இதிலுள்ள படத்தைப்பார். இது என்படமல்லவா?" என்றார். அவள் அதைப் பார்த்தவுடன் நடுநடுங்கி ராஜாவை மன்னிப்புக் கேட்டாள்.

4. வக்கீல் பீஸ்.

கைதி. ஐயா! இந்தக் கேசுக்கு 1000 ரூ பீஸ் அநியாயமாகத் தோன்றுகிறது.

வக்கீல். நான் உன்னைப் பைத்தியகாரனாக ரூபித்து, விடுதலை கிடைக்கப் பண்ணவில்லையா?

கைதி. ஆம்! சரிதான். ஆனால் நான் தங்களுக்கு 1000 ரூ பீஸ் கொடுக்கத் தக்க அவ்வளவு பைத்தியகாரனாகி விட்டதாக தாங்கள் ரூபிக்கவில்லையே.

—:o:—

5. வஞ்சனைமிகுத்துப் போயிற்று.

A. இக்காலம் உலகத்தில் வஞ்சனை மிகுத்துப் போயிற்று. கண்ணுக்குக்கண்ணிஷ்டமான சிநேகிதனையுங்கூட நம்ப இடமில்லை.

B. அதுமட்டுமா! கண்ணுக்குக் கண்ணிஷ்டமான சிநேகிதருங்கூட நாம் சொல்வதை நம்புவது அதிலுங் கஷ்டமாகி விட்டதே.

6. யோசிக்கத்தக்கது.

எஜமான். ராமசாமி! நீ உண்மையாய் உழைத்து, கடைக்குப் போகும் பொழுதெல்லாம் வெகு செட்டாய் சாமான் வாங்கி வருவாயாயின், மாதக்கடைசியில் வெகுமதி தருகிறேன்.

இராமசாமி. நல்லது ஐயா! யோசித்து சாயந்தரஞ் சொல்லுகிறேன்.

---

7. ஒன்றிற் கொன்றுமேல்.

மனைவி. ஒருவன் தன் மனைவி தன்னை நேசிக்கிறபிரகாரம் அவனும் அவளை நேசிப்பானாயின், அவள் விரும்பிய பிரகாரமே வீணாய் சுருட்டில் காசைச் செலவிட மாட்டான்.

புருஷன். நீ சொல்வது சரியே. ஆனால் ஓர் ஸ்திரீ தன் விருப்பத்தின் படியே சுருட்டுப் பிடிப்பதை நிறுத்தத்தக்கதாக அவ்வளவு அன்பு பாராட்டும் புருஷனை எவ்வளவு நேசிக்கவேண்டுமோ அவ்வளவு அவளும் நேசிப்பாளாயின் அப்படிக் கேட்கமாட்டாள்.

வைத்தியக் குறிப்பு.

1. ஔஷதஞ் சாப்பிடும் விதம்.

குழந்தைகளுக்கு ஔஷதங் கொடுக்கும்பொழுது "இது நன்றாயிருக்கும் இனித்துக் கிடக்கும்" என்று பொய் சொல்லி அருவருப்பான ஔஷதங்களை ஊட்டுவதால், நாட் செல்லச்செல்ல குழந்தைகளுக்குத் தாய்மார் வார்த்தையில் நம்பிக்கை யிருக்கமாட்டாது. ஆமணக் கெண்ணெய்முதலிய அருவருப்பை யுண்டாக்கக்கூடிய ஔஷதங்களைச் சாப்பிடுமுன், பெப்பர் மின்ற் எஸன்ஸ் (Essence of Peppermint) ஒருதுளியை நாவில் தடவிக் கொண்டு மருந்தைச் சாப்பிட துர்வாடை தெரியாது. அல்லது, மருந்து சாப்பிடுமுன்னும் சாப்பிட்ட பின்பும் ஒரு கிச்சிலிப்பழத்தைச் (Orange) சப்பிக் கொள்ளலாம். சிலர் அரிசி, சர்க்கரை முதலியவற்றையும் உபயோகிப்பார்கள்.

2. பாலுண்ணிக்கு ஔஷதம்.

(Cure for warts).

பாலுண்ணியைச் சுற்றி நீண்ட ரோமத்தினால் அல்லது பட்டு நூலினால் இறுக்கிக் கட்டிவிடின், இரத்தம் பாலுண்ணிக்குச் செல்லாமல் தடைப்படுவதனால் இரண்டு மூன்று தினங்களுக்குள் அது விழுந்துவிடும்.

வேறொரு வகை. எந்த இங்கிலீஷ் ஔஷதசாலையிலும் லூனார் காஸ்டிக் குச்சியை (Lunar Caustic pencil) இரண்டணாவுக்கு வாங்கிவைத்துக்கொண்டு, பாலுண்ணியின் மேல் பாகத்தில் தண்ணீர் தடவி நனைத்துக்கொண்டு மேற்படி காஸ்டிக் குச்சியினால் மெதுவாய்த் தடவவேண்டியது. இரண்டு நாளைக்குப் பிறகும் பாலுண்ணி சிறிது இருந்தால் அப்படியே தடவ முற்றிலும் நீங்கிப் போகும்.

எச்சரிப்பு—லூனர் காஸ்டிக் மகாகொடிய அக்கினியாதலால சரீரத்தின் மற்றப் பாகங்களில் படாமல் எச்சரிப்புடன் தடவ வேண்டும்.

—:o:—

3. பாதங்களுக்கு உப்புநீர் ஸ்நாநம்.

மானிட மர்மசாஸ்திரம் 327-வது பக்கத்தில் காண்பித்திருக்கும் பாதஸ்நாநத் தொட்டியில் ஒரு சிரங்கை உப்பைக்கரைத்து, அதில் வாரத்துக் கொருமுறை பாதஸ்நாநஞ் செய்து வருவதால் பாதங்களுக்கு உறுதியும் பெலனுமுண்டாகும்.

---

4. மயக்கம்.

"மானிட மர்ம சாஸ்திரத்தின் 374-ம் பக்கத்தின் தொடர்ச்சி"—

ஒரு ஸ்திரீக்கு மயக்கமுண்டாக ஆரம்பித்தவுடனே தன்னால் எவ்வளவு தூரங் குனியக்கூடுமோ அவ்வளவு தூரங் குனிந்து, தன் தலையை முழங்கால்வரை தாழ்த்தவேண்டும். இப்படிக் குனிதல் இருதயத்தில் கட்டிநிற்கும் இரத்தத்தை வெளியே இழுத்துவிடுமாதலால் மயக்கம் அதிகரிக்காமல் உடனே நின்றுவிடும்.

நாடகசாலைமுதலிய கூட்டமான இடங்களிலிருக்கும்போது ஒரு ஸ்திரீக்கு மயக்கங்காணின் இப்படிக் குனிவதனால் பக்கத்திலிருப்பவர்களுக்கு ஒன்றுந் தெரியாமலே மயக்கம் நீங்கி சுகமுண்டாகும்.

எச்சரிப்பு. 1. (Smelling Salt) ஏதாவது முகரும்படி கொடுத்தால் அவைகள் முகத்தில் பட்டால் கொப்பளித்து விடுமாதலால் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அரமோற்றிக் அம்மோனியா (Aromatic Ammonia) வில் 30 துளி அரை ஒயின் கிளாஸ் ஜலங் கலந்துங் கொடுக்கலாம்.

2. மயக்கங் கண்டிருக்கும்போது எவ்வித காரணத்தாலும் பின்னுக்கு சாயவிடக்கூடாது.

3. மயக்கந் தெளிந்துகொண்டு வரும்பொழுது அருகில் ஜனங்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டவுடன் திரும்பவும் மயக்கந்தோன்றி நடுக்கமுண்டாகும். ஆதலால் ஜனங்களை நோயாளியின் பக்கம் வரவிடக்கூடாது.

5. வேப்பெண்ணெய் சுடர் தைலம்.

கருஞ்சீரகத்தை நன்றாய்த் தூள்பண்ணி, அந்தத் தூளோடு வெள்ளைப்பூண்டு சேர்த்து அரைத்து, அதை ஒரு சிறுதுணியில் கட்டி, ஒருநீள இரும்புக் கம்பியில் குத்தி வைத்துக் கொண்டு வேப்பெண்ணெயில் நனைத்து நெருப் பேற்ற பந்தம்போல் எரியும். அப்படி எரிகிற பந்தத்தில் வேப்பெண்ணெயை ஊற்ற, விழுகிற சுடரை ஒரு கோப்பையில் பிடித்துவைத்து அதையும் அப்படியே எடுத்து அதேபந்தத்திலிட்டு திரும்பவும் சுடர் தைலம் இறக்கவும். இதேவிதமாய் மூன்றுதடவை சுடர்தைலம் இறக்கி சீசாவில் அடைத்து வைத்துக்கொண்டு ஜன்னி, விடாச்சுரம், குளிர்க்காய்ச்சல் முதலிய வியாதிகளுக்கு பெரியவர்களுக்கு ஒரு மேசைக் கரண்டியளவும், சிறுவர்களுக்கு ஒரு தேயிலைக் கரண்டியளவும், குழந்தைகளுக்கு அரைத்தேயிலைக் கரண்டியளவும் வியாதியின் கூறுக்குத் தக்கது கொடுக்க எவ்வித சுரமும் ஜன்னியும் உடனே நீங்கி சுகமாகும். கைகண்டமுறை.

---

6. ப்ளேக்நோயை ஓட்டும் விதம்.

டாக்டர் ஜோவஸியா ஒஸ்ட்பீல்ட் என்பவர் தாம் வேலைபார்த்து வந்த சுதேச அரசாக்ஷி நாட்டில் ப்ளேக்நோயைத் துரத்தினவிததைப் பற்றி அக்டோபர் மாதம் ஒரு நேர்த்தியான உபந்நியாசம் எழுதியிருக்கிறார். முதல் இரண்டு தடவைகளிலும் ப்ளேக்நோய் வந்தபொழுது 50,000 உயிர்கள் சேதமாயினவாம். ஆனால் இவர் சொல்லுகிற பிரகாரம் அவர்கள் செய்தபொழுது, திரும்பவும் ப்ளேக்நோய் வரவேயில்லை; அத்தோடு அந்த சுதேச மாகாணங்களிலுள்ள ஜனங்களும் ப்ளேக்நோய்க்குப் பயப்படுகிறதே யில்லையென்றும் அறிகிறோம். இப்படி அவர்கள் அந்தநோயை ஜெயித்ததற்குக் காரணம் அத்தேசத்திலுள்ள மந்திரியானவர் நயவசனிப்பினாலும், சாந்தமான நடத்துதலினாலும் பிரஜைகளைத் தன் கைவசப்படுத்திக் கொண்டதே. மற்ற இடங்களிலோ இவ்விதமான தொற்றுநோயால்பிடிக்கப்படுபவர்களைப் ப்ளேக் கூடாரங்களுக்கு இழுத்துக்கொண்டுபோய் விடுகின்றார்கள். இதனாலேயே பாதிஜனங்கள் பயத்தினால் இறந்துபோகின்றார்கள். ஆனால் இந்த

மந்திரியோ அவர்களை அவவிதமாகக் கூடாரங்களுக் கனுப்பாமல் வேறுவிதமாகவும் தொற்று நோய்களைத் தடுக்கலாம் என்பதை ஜனங்களுக்குக் காட்டினர்.

அதாவது பின்வருமாறு:—

கவர்ன்மெண்டார் ஒவ்வொரு பட்டணத்தையும் பற்பல பாகங்களாகப்பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் மேற்பார்க்கும் பொருட்டு இன்ஸ்பெக்டர்களையும் நியமித்தார்கள். பின்னல் கவர்ன்மெண்டிலிருந்து சகல வீடுகளுக்குஞ் சுண்ணும்பும், க்லோரைட் ஆப்லைம் (Chloride of lime) பெர்க்லோரைட் ஆப்மெர்கரியும்(Per Chloride of mercury) இன்னும் சில விஷக் கிருமி நாசனிகளையும் (Disinfectants) இனமாகக்கொடுத்தார்கள். அப்புறம் ஒரு குறிப்பிக்கப்பட்ட தினத்தில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டை நன்றாகச் சுத்தம்பண்ணி வீடுகளுக்கெல்லாம் வெள்ளை யடிக்கும்படியாக அந்தநாளை ஒருபெரிய விடுமுறைநாளாக கவர்ன்மெண்டார் ஏற்படுத்தினர்கள். சகல வீடுகளும் ஏக சமயத்தில் சுத்தஞ் செய்யப்பட்டன. அவ்வண்ணம் சுத்திசெய்தபின்பு சகலமும் சரியாகச் செய்யப்பட்டிருக்கிறதாவென்று ஒவ்வொரு இன்ஸ்பெக்டர்களும் தத்தமக்குக் குறிப்பிக்கப்பட்ட பகுதிகளைப் பரிசோதிக்கும் பொருட்டுப் போய் சுற்றித்திரிந்தார்கள். பெரிய உத்தியோகஸ்தருங்கூட அன்றையத் தினத்தில் தம் தம் குதிரைகளிலேறிக்கொண்டு பட்டணங்களிலுள்ள அகன்ற தெருக்கள் வழியாகவும், ஒடுங்கியதும் அசங்கியமானதுமான சந்துக்கள் வழியாகவும் சுத்தமான இடங்களிலும், ப்ளேக்நோய் கண்ட இடங்களிலும் போய் ஜனங்களை உற்சாகப்படுத்தியதனுல் அந்நாள் ஒரு பெரிய சுத்தம் பண்ணுகிற திருவிளாமாதிரியாக இருந்தது. பின்னும் 8 தினங்களிலும் சாயங்காலம் 6-மணி முதல் 8-மணி வரைக்கும் பட்டணங்களிலுள்ள ஒவ்வொரு மூலைமுடுக்குகளிலும் அறைகளிலும் கெந்தகம், தார், சாம்பிராணி முதலிய வஸ்துக்களை எரித்துபுகைப் போட்டார்கள்.

இவைகளெல்லாம் ஜனங்களுக்கு கவர்ன்மெண்டாரால் இனமளிக்கப்பட்டது. இந்த சமயங்களில் நாம் தூரத்திலிருந்து இப்பட்டணங்களைப்பார்த்தால் புகை மயமாகவே இருக்கும் ஒவ்வொரு தெருக்களிலுள்ள ஒவ்வொரு வீட்டையும் சரியாகப் பார்க்கும் பொருட்டு முனிசிபல் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் பட்டார்கள்; வீடுதோறும் போய் ஜனங்களைப் பார்க்கும் பொருட்டு தெருக்கள் தோறும் டாக்டர்கள் நியமிக்கப்பட்டார்கள். பின்னல் கட்டுப்படாத ஜனங்களைக் கண்டிக்கும் பொருட்டு பகுதிகள் தோறும் மாஜிஸ்திரேட்டுகள் நியமிக்கப்பட்டார்கள். ஆனல் மற்றவர்கள் கவர்ன்மெண்டார் கொடூரமாக இருக்கிறர்கள் என்று சொல்லுவதற்கு இடமில்லாமல் ஒவ்வொரு தெருக்களிலுள்ள மூன்று முக்கியஸ்தர்களைக் கொண்டு கவர்ன்மெண்டாருடைய கருத்து இன்னதென்பதையும், அவர்கள் செய்வது தங்களுடைய நன்மைக்காக என்பதையும் மற்ற சாதாரணமான ஜனங்களுக்கு விளக்கிக்காண்பிக்கும் பொருட்டு அந்த மந்திரியானவர் ஏற்பாடுசெய்தனர்.

இதுமாத்திரமன்று; ப்ளேக்நோய் எவருக்கு வந்தாலும்சரி; அவர்கள் உடனே கவர்ன்மெண்டாருக்குத்தெரிவித்தால் அவர்களை ஊருக்குப்புறம்பேயுள்ள தொற்றுநோய் கூடாரங்களுக்கு அனுப்புவிக்காமல் அவரவர்கள் வீட்டிலேயே தனிமையாக ஒரு அறையில்வைத்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய மருந்துகளெல்லாம் கவர்ன்மெண்டார் இனமாகக் கொடுத்தார்கள். ஆனல் அவ்வண்ணம் ப்ளேக் கண்டும் தெரிவிக்காதவர்களை மேற்படி கூடாரங்களுக்கு அனுப்பவேண்டுமென்றும் உத்தரவு கொடுத்தார்கள். வீடுகளிலேயே வைத்துக் கொள்ளப்பட்ட ப்ளேக் நோயாளிகள் படுக்கின்ற அறையில் மற்றவர்கள் படுக்கக்கூடாதென்றும் சொல்லியிருந்ததனுல் ப்ளேக்நோய் மிகவும் அபூர்வமாய் விட்டது. இவ்விதமாக ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் ஒன்று சேர்ந்து பிரயாசப்பட்டதனுல் ப்ளேக் நோயானது முற்றிலும் அற்றுப்போயிற்று.

7. விக்கலுக்கு

சீரகம், திப்பிலி, கிராம்பு, வகைக்கு ஒரு ரூ யெடை யெடுத்து ஆழாக்குத் தண்ணீரில் வேகவைத்து கஷாயஞ்செய்து வடித்து, அதில் மயிலிறகு சுட்டசாம்பல் திரிகடிப்பிரமாணம் கலந்துகொண்டு ஒருமணி நேரத்திற்கொருதரம் அரை அவுன்ஸ் கொடுக்க விக்கல் நிற்கும்.

அல்லது

காடி 2-கிராம், தேன் 1-கிராம் கலந்து ½-மணி நேரத்திற் கொருதரம் ஒரு கிராமாக இரண்டு மூன்று முறை கொடுத்தால் விக்கல் நிற்கும்.

ஹிதோப தேசம்.

ராஜவத் பஞ்சவர்ஷாணி
தசவர் ஷாணிதாசவத்
ப்ராப்தேத்து ஷோடசேவர்ஷே
புத்ரம் மித்ரவதாச்ரேத்.

அதாவது எவனுந்தன் மகனை ஐந்தாம் பிராயம் வரையில் அரசனைப் போலவும், ஐந்துக்கு மேற்பட்டுப் பத்து அல்லது பதினறுவரையில் ஊழியனைப் போலவும், பதினறுக்கு மேற்பட்டுச் சிநேகனைப் போலவும் நடத்தவேண்டுமென்று தர்மசாஸ்திரஞ் சொல்லுகின்றது.

கண்ணுற் கண்டதும் பொய்
காதாரக் கேட்டதும் பொய்
தீர்க்க விசாரித்துத் தெளிந்து
முடிவுசொல்வதே மெய்.

தாழ்மை. தன்னைத்தானே ஆழ்ந்தறியும் உண்மையறிவினல் விளையும் சுயநிந்தையாகிய தாழ்மையானது அகங்காரத்தை ஆணிவேர்மட்டுஞ் சென்றுதாக்கி எடுத்தெறிந்துவிடும்.

வென்றடக்குவதற் கரிய துட்ட மிருகம் நம்மைக்கொன்று விழுங்காதபடி அதனை இருப்புத்தளைகளால் இறுகப்பிணித்துத் தடிகொண்டு அடிக்குமாப்போல் நாம் நமதுட விச்சையை அடக்கி யடக்கி நடத்தவேண்டும்.

தன்னூழியனைச் சொகுசாயூட்டி வளர்க்கின்றவன் சில தினங்களுக்குள் அவனைத்தன் மேலெதிர்க்கக் காண்பான்.

அழிபுண் பரந்து தொற்றுப் பற்றிக்கொள்ளத் தேடுமிடம் யாவற்றிலும் இரக்கமின்றிச் சதையை அறுக்கவும் பொசுக்கவுமா யிருக்கின்ற விவேகஸ்தனை இரணவைத்தியனது கொடுமை சுகிர்த பலனைக்கொடுக்குமன்றே? அஃதேபோல் தன் உடலின்துர் ஆசாபாசங்களையும் தீய இச்சைகளையும் எதிர்த்து மறித்து தன்னுடலைக் கண்டிப்பாய் நடத்துகிறவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்வான். "தன் உயிரைச் சிநேகிக்கின்றவன் அதனைப் போக்கடிக்கின்றான், பகைக்கின்றவன் நித்தியத்துக்கு அதனைக் காப்பாற்றுகின்றான்" என்று திருவுளம்பற்றினர் ஜெகத்ரட்சகர்.

ஒரு தத்துவ சாஸ்திரியினிடத்தில் எப்படி உமக்கு இவ்வளவு ஞானம் உண்டாயிற்றென்று ஒருவர்கேட்டதற்கு தனக்குத் தெரியாத விஷயங்களைக் குறித்து மற்றவர்களிடத்தில் கேட்பதில் வெட்கப்படாதிருந்ததனலே தான் என்று மறுமொழி பகர்ந்தாராம்.

அன்பு.

அன்பே உருவாக இவ்வவனியின் கண் ணவதரித்து அருள் நிறைந்தோங்கிய
வித்வான், தண்டலம் பாலசுந்தர முதலியாரவர்கள், தாம் பரலோகபிராப்தி யாவதற்கு
மூன்று தினங்களுக்குமுன் இவ்வரிய வியாசத்தை "ரஞ்சித போதினிக்காக" எழுதிவைத்துப் போயினர்.

"அங்கோடிங் கோடல மருங்கள்வர்
ஐவர்கலக மிட்டலைக்குங் கானகம்
சலமலப் பேழையிரு வினைப்பெட்டகம்
வாதபித்தங் கோழைகுடி புகுஞ்சிறர்
அடலைப் பெரிய சுடலைத்திடருள்
ஆசைக் கயிற்றிலாடும் பம்பரம்
காமக்கனலிற் கருகுஞ் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ்சருமி"

என்று பெரியோரால் இகழ்ந்துரைக்கப்பட்ட நம்தேகம் சுத்தமடைந்து யாவரும் வியக்கத்தக்க அரும் பொருளாவது எதனலென்று யூகித்தறியுமிடத்து, அன்பு என்னுமரிய பொருளினலேயே யென்று தெரியவரும். திரிலோகங்களிலும் அன்பினுமிக்கதோர் செல்வமில்லையென்று பொருள்படக் கம்பராகிய கவிச்சக்கிர வர்த்தியும்:—

"முன்பு பின்பின்றி மூவுலகத்திலும்
அன்பினல்லதோ ராக்க முண்டாகுமோ?"

என்றார்.

உரைக்குறிப்பு :—அலமருங்கள்வரைவர்— சுழலும் பஞ்சேந்திரியங்களாகிய கள்வர். அடலை—சாம்பல், திடர்—மேடு, அஞ்சருமி—அழியுந்தோல் கருவி.

"இறவாத இன்பவன்புவேண்டி" என்றும், "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்தவின்பமே, என்னுடையன்பே" என்றும் அறிஞர்கூறிய அமுத அனுபவ வாக்கியங்களினாலும், நம் அனுபவத்தினாலுமே அன்பே இன்பமென்றும், வன்பே துன்பமென்றும் அறிகின்றோம். ஆதரவற்ற ஓரேழையினிடத்து எவ்வித கைம்மாறும் எதிர்பாராமலே நாம் பரிதாபங்கொண்டு அன்பு செலுத்தி அவனுக்கு உணவாதிகள் தந்து உபசரிக்கும்போது, நம் உள்ளத்தில் இயற்கையிலே ஒருவகையான இன்பம் உண்டாவதை நாம் காண்கின்றோம். இது கல்வி கேள்வி, சாது சங்கச் சார்பு, நல்லொழுக்கம் முதலிய நற் செய்கைகளினாலுண்டாகும் ஒரு சம்பத்து. நிஷ்காரணமாகப் பிறர்க்குத் துன்பஞ்செய்து வன்பு பாராட்டி அவர்களை மனமொழிகளினால் அல்லற்படுத்தும்போது, அவர்கள் வருந்துவதைக் கண்டு இன்பமடைகின்றவர்களையும் நாம் உலகத்திற் காண்கின்றோம். இவர்கள் மானிடமிருகங்களேயன்றி கரசரணாதியவயவங்கள் பெற்றிருக்குங் காரணத்தினாலேயே மானிடராகார்.

அன்பென்னும் வித்து நம் பெருமானருளால் நம் மனமெனும் புலத்தில் மெல்ல அங்குரிக்கும்போது, அதனை நல்லொழுக்கமென்னும் நீர்கொண்டுபாய்ச்சி, அது தலையெடுக்கவொட்டாதுதோன்றும் சுயப்பிரயோஜனமென்னுந் தீயகளையைக் கல்வியறிவென்னுங் கோடரியைக்கொண்டு கிண்டியெறிந்து, காமக்குரோதாதி வன் பறவைகள் அதற்குத் தீங்குசெய்ய அணுகாதபடி, கடவுளாக்ஞையென்னும் பெரும்பறையை முழக்கியோட்டிய பின், அருளென்னும் பயிர்தழைக்க அதில் விளையும் இன்பமென்னும் போகத்தை அனுபவித்துச் சுகிப்பது ஒவ்வொருவருடைய பெருங்கடமையாகும். பிறவுயிர்களை வருத்துஞ் சிங்கம், புலிமுதலிய துஷ்ட மிருகங்களும் தம்முடைய குட்டிகளிடத்து அன்புபாராட்டி அவற்றைப் போஷிக்கவில்லையா? ஆகவே, அன்புயென்னும் இவ்வரிய பொருள் பிரதமத்தில் தன் சுயநலத்தையே நாடிநின்று, பிறகு தன்மனைவி, மக்கள் முதலிய தொடர்புடையாரிடத்துப் பரவுவதாகும். இது ஏனையோரிடத்தும் வியாபித்து எவரையும் நம்மைப்போலவே பாவித்து வாஞ்சை பாராட்டும்போது இவ்வன்புக்கு அருளென்று பெயர். ஆகையாற்றான் "அருளென்னும் அன்பீற்குழவி" (அன்பென்னுந்தாய்பெற்ற அருளென்னுங் குழந்தை) என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவர் கூறுகின்றனர். உலகத்திலுள்ள எல்லோரையும் நம்மவர்களாகப் பாவித்து அவர்களிடத்து அருள்பாராட்ட வேண்டுவது ஒவ்வொருவருடைய செய்கடனாயிருப்பதால், முன்னே நம்மிடத்தும் நமக்கு நெருங்கிய உறவினர்களாகிய மனைவி மக்கள், அவர்கள் மூலமாக வரும் சம்பந்திகள், நண்பர்கள், ஆகிய இவர்கள்பால் இயற்கையிலுண்டாகும் அன்பை வளர்க்கும் நிமித்தமே இல்வாழ்க்கைத் தருமத்தை இன்றியமையாத ஆசிரம தருமமாகப் பெரியோர் ஏற்படுத்தினார்கள். "அறனெனப்பட்டதே யில்வாழ்க்கை" என்றும், "இல்லற மல்லது நல்லறமன்று" என்றும் அறிஞர் அறுதியிட்டுக் கூறியதன்காரணம் இதுவேயாம்.

"என்பிலதனை வெயிற்போலக் காயுமே
அன்பிலதனை யறம்"

(என்பு அமையப் பெறாதபுழுவை வெயில் சுட்டெரிப்பதுபோல் அறக்கடவுள் (தருமதேவதை) அன்பிலாதவரைக் கோபித்துத் தண்டிக்கும்.) என்று தெய்வப்புலவர் கட்டளையிட்டிருக்கின்றனர். 'அன்பிலவனை' அல்லது 'அன்பிலவரை' என்னாது "அன்பிலதனை" என்றமையால், அன்பில்லாரை, உயர்திணைப் பொருளாக மதிக்க மனமின்றிக் கேவலம் அஃறிணைப் பொருளாகவே இழிவு படுத்திக் கூறியதாகும்.

இப்படிப்பட்ட அரும்பொருளாகிய அன்பென்பது **தலையன்பு, இடையன்பு, கடையன்பு** என மூவகைப்படும். தலையன்பென்பது முதல் தரமான மேலான அன்பு. இது இக்காலத்துக் காண்பதரிது. தன்னை முற்றும் மறந்து பிறரைத்தன்னினும் மேலாகப் பாவிக்கும் தன்மையது. தைலதாரைபோல் இடைவிடாது எவ்வகைப்பட்ட இடுக்கணுக்கும் களையாமல் விளங்குவது. கண்ணப்பநாயனார் தம்முடைய ஆன்மார்த்தமாகிய காளத்தியப்பரைக் கண்டபோது தம்மை மறந்து அவர்வயமாகியே நின்றநிலைதான் தலையன்பெனப்படும். காளத்தியப்பர் கண்ணில் உதிரம்பெருகுவதைக் கண்டமாத்திரத்திலேயே தன்னையொரு பொருளென மதியாமல், ஊனுக்கு ஊன் மருந்தாகுமே யென்னும் நினைவுதோன்ற, உடனே அம்பினால் தமது கண்ணை இடந்து அவருக்கு அப்பியதும்; பெருமான் அவருடைய பேரன்பின் திறத்தை உலகத்தார்க்கு விளக்கும்

பொருட்டு மற்றொரு கண்ணினின்றும் குருதி சோரும்படி செய்ய, அதைக்கண்ட மாத்திரத்திரம் "கண்டேன் கைகண்டதோர் ஔஷதம்" என்று குதூகலத்துடனே அன்பர் தம்முடைய மற்றொரு கண்ணையும் அம்பினால் தகரத்தலைப் பட்டதும் தலையன்பாகும்.

"கண்ணப்பனொப்ப தோரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தியாரறி தலல்லது மற்
றாரறியு மன்பன்றது."

என்று அறிஞர் வியக்கின்றார்கள். இவ்வன்பருடைய தேகமுழுவதும் அன்புருவமே யன்றிச் சப்த தாதுக்களாலாகிய சாதாரண தேகமாகக் கொள்ளக்கூடாது. ஆகையாற்றான், "கண்ணப்பனொப்ப தோரன்பு" என்று ஸ்ரீமாணிக்கவாசகப் பெருமான் தம்திருவாசகத்தில் வியக்கின்றனர். "கண்ணப்பனுக்குமோ ரன்பன்"; என்று சொல்லவேண்டுவது இயல்பாயிருக்க, அவ்வாறு கூறாது "கண்ணப்பனொப்பதோரன்பு" என்று கூறியதன் காரணம் யாதெனில், கண்ணப்பன்வேறு, அன்புவேறு என்று கருதுவது கூடாது; கண்ணப்பன் அன்பினுருவேயன்றி வேறல்ல என்னும் பரமரகசியத்தைச் சூசிப்பிக்கும் பொருட்டேயாம். இத்தகைய தலையன்பானது அன்புக்குரிய பொருளைக்காணுங்காலும் காணாக்காலும் இடைவிடாது உயிர்நிலையாய் நிற்பதாகிய பெருஞ் செல்வமாகும்.

இடையன்பு என்பது, அன்புக்குரிய பொருளை நேரிற் காணும்போது மாத்திரம் சுரப்பதொன்றாகும். நெருப்புக்குமுன் அரக்கையாவது மெழுகையாவது காட்டும்போது அது மெல்ல [illegible] துபோல், நேரிற்காணும்போது மாத்தி[illegible] முருகிப் பரவசமடைதலே இடையன்[illegible]. அன்புக்குரிய பொருளைவிட்டுப் பிரிந்[illegible]லத்து இந்த இடையன்பு சுருங்கும்.

கடையன்பு என்பது இரண்டு கட்டைகளை [illegible]ன்றோடொன்று நெடுநேரம் தேய்க்கும் போ[illegible]ண்டாகும் தீப்பொறிபோல் அன்பனும் அன்[illegible]புக்குரிய பொருளும்நேரில் நெடுங்காலம் பழகிய பின்னர் தோன்றும் அன்பாகும். இஃதும் பிரியும்போது பையப்பைய மறைவதாகும்.

தன் பிராணநாயகன் இறந்தானென்று கேட்ட மாத்திரம் உயிர்துறக்கும் தலைவியின் அன்பே தலையன்பெனப்படும். பூர்வம் சூரபத்மனென்னும் மஹாசூரனாகிய அசுரேந்திரன் முருகக்கடவுள் வேலாயுதத்தால் மாண்டானென்று கேள்வியுற்றவுடனே அவனது மனையாட்டி பத்மகோமளை உயிர்துறந்தாளென்று அறிகிறோம். இவ்வாறே தலையன்புடைய ஸ்திரீ பூமான்கள், "ஒருங்கிய இரண்டுடற்கு யிரொன்றாயினர்" என்று கம்பர் சக்கிரவர்த்தித் திருமகனாரையும் ஜானகியாரையுங் குறிப்பிட்டு வியக்கும் விதமாக இருப்பார்கள். இத்தகைய மேம்பாடுடைய தலையன்புக்கு அடியில்வரும் சரித்திரமே நிதரிசனமாகும்:—

உத்தமதானபுரம் என்னும் நகரத்தை இராஜதானியாகக்கொண்டு சுசிலமென்னும் பல்வளஞ் சிறந்தபெரு நாட்டை மனுமுறைதவறாது பத்மநாபன் என்னும் அரசன் ஆண்டுவந்தனன். தன் அரசாட்சிக்குட்பட்ட உயிர்வர்க்கங்கட்குத் தன்னாலாவது தன்பரிஜனத்தாலாவது பகைவர்களாலாவது கள்வர்கள் முதலிய துன்மார்க்கர்களாலாவது, தீயவிலங்குகள் முதலியவற்றாலாவது எவ்வித துன்பமும் நேரிடாதவகைக்கு மன்னுயிரைத்தன்னின் னுயிர்போற்கருதிக், 1 காவலனென்னும் பெயர்க்குப் பாத்திரனானான். துஷ்டநிக்ரஹமும் சிஷ்டபரிபாலனமுஞ்செய்து செங்கோல்வழுவாது அரசாண்டுவந்த அவ்வரசனுக்கு வாழ்க்கைத் துணையாயமைந்த மனையாளாகிய பட்டஸ்திரீ கனகாம்புஜம் என்னும் பெயர் பெற்ற கற்பிற் சிறந்தவள். பத்மநாபனும் கனகாம்புஜமும் அன்றிற் பறவைகளைப்போற் பிரியா அன்புடையர்களாகி "காதலிருவர் கருத்தொக்க 2 வாதரவு பட்டதேயின்பம்" என்றபடி இல்வாழ்கை யின்பத்தை யெய்திவருங்காலத்தும்,

"வித்தகமாய்க்
3 காதிவிளையாடி யிருகை வீசிவந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்"

சாதுரியமாகக் கதைபேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும், கைவீசிக்கொண்டும் வந்தாளாயினும் தலைமேலிருக்கும் நீர்க்குடம் கீழே விழ்ந் தொடையாதபடி வேலைக்காரி தன் மனத்

குறிப்பு 1. காவலன்—தன்னரசாட்சிக்குட்பட்ட உயிர் வர்க்கங்களை மேற்கண்ட ஐவகையான துன்பங்களும் அணுகாதபடி காக்குந் தொழில்பூண்டவராதலின், அரசனுக்குக் காவலன் என்னும் பெயர் காரணப்பெயராயிற்றென்க. | குறிப்பு 2. ஆதரவு—ஆசை. | குறிப்பு 3. காதி—கதைசொல்லி.
குறிப்பு 4. ஒற்றர்—வேவுக்காரர்கள்.

தை அதனிடத்தே வைத்துப் போவதுபோல், சர்வேசுவர ரிடத்தில் அயர்விலா அன்பு பாராட்டிவந்தனர். இப்படியிருக்க, ஒருநாள் மாலைப் போது அவ்விருவரும் சந்திரகாந்த மேடைகளமைந்த மேலுப்பரிகையிலிருந்து உல்லாசமாக வார்த்தையாடிக்கொண்டிருக்கையிலே, வடக்கே நெடுந்தூரத்தில் தங்களுடைய அதிகாரப்பிரதேச எல்லைக்கப்பால் ஒருபெருஞ் சோதியும் வெளிச்சமும் தோன்றின. அவற்றின் காரணம் அவர்களுக்குப் புலப்படாமையினால், அரசன் உடனே தன்னுடைய 4 ஒற்றரை யழைத்துக் காரணத்தை அறிந்துகொண்டு வருமாறு கட்டளையிட்டனன். அன்றிரவு சுமார் பதினைந்து நாழிகைக்கு ஒற்றர் திரும்பிவந்து, ஐயனே! அரசரேறே! தேவரீர் கட்டளையைச் சிரமேற்றாங்கி அதிவிரைவாகச் சென்று பார்த்தோம். தேவரீருடைய அரசாட்சிப்பிரதேச எல்லைக்கப்பாலுள்ள ஒரு கிராமத்தில் ஒருவன் நேற்று இறந்துவிட்டதாகவும், அவனைத் தகனஞ்செய்யுங்காலத்திலே அவனுடைய கற்பிற்சிறந்த மனையாள் இன்னும் ஏராளமாகக் கட்டைகளை மலைபோற்குவித்துப் பெருந்தீ மூட்டித்தன் கணவனுடனே இன்று உடன்கட்டை யேறுவதாகவும் இருப்பதால், அனேகபிரஜைகள் அவ்வதிசயத்தைப் பார்க்கப் பெருங்கூட்டமாகக் கூடியிருக்கின்றனர்; அத்தீயின் சோதியும் அதனால் நெடுந்தூரம் வரையிலே ஆகாயத்தில் தோன்றிய வெளிச்சமுமே தேவரீர் கண்ணுக்குப்புலப்பட்ட சோதியும் வெளிச்சமுமாகும். என்று விடை கூறிப்பணிந்து நின்றார்கள். அரசன் அவர்களையனுப்பிவிட்டு, அவ்விருத்தாந்தத்தைக் கேட்டுக்கொண்டிருந்த தன்னருமைக்காதலியாகிய கனகாம்புஜத்தை நோக்கி—"என்னுயிர்க்காதலியே! அந்தக் கிராமத்தில் கணவனோடு உடன்கட்டையேறும் மாதுசிரோன்மணி யல்லவோ கற்புடையாள். என்ன அன்பு! என்ன மனவுறுதி! மஹா அதிசயம்! இத்தகைய அன்பிற்சிறந்த மனையாளும் இக்கலியுகத்தி லிருக்கின்றனளே! பார். இவளுக்கு நிகராக எவரைச் சொல்லக்கூடும்." என்று பலவாறு வியந்துகொண்டிருந்தான். அதைக் கேட்ட பட்டஸ்திரீயாகிய கனகாம்புஜம் கலகல வென்று சிரித்து, அந்த சோதியும் வெளிச்சமுந் தோன்றிய திசையை நோக்கிக் காரியுமிழ்ந்து. "இவளும் ஒரு பதிவிரதையா! கணவனிறந்து இரண்டு நாளாய் விட்டது இதுவரையிலே உயிர் தாங்கி ஊராரெல்லாம் தன்னைப்பார்த்து வியக்கும்படிப் பெருந் தீ மூட்டிக் கணவனுடன் அக்கினிப்பிரவேசஞ் செய்து தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் கேவலமான இவளையும், என்னுயிர்க் காதலனே! நீ வியந்தது எனக்கு வியப்பாயிருக்கின்றது! இவளது அன்பும் அன்பெனப்படுமா! இவள் செய்கை வீண் பெருமை விருப்பத்தைக் காட்டுகின்றதேயன்றிக் கணவனிடத்திருக்கும் உள்ளன்பைக் காட்டவேயில்லை. தன் பிராணநாயகன் இறந்தானென்று கேட்டபோதே அல்லது கண்டபோதே தன்னையறியாமலே உயிர் நீங்கப்பெறும் மடந்தையல்லவோ உத்தமி! கற்பிற் சிறந்தவள்! தலையன்புருவானவள்!" என்று விடை பகர்ந்தாள். அது கேட்ட பத்மநாபன் ஒன்றுந் தோன்றாதவனாகி எவ்வித மறுமொழியுங் கூறாமலே சயனத்திற்குச் சென்றான். கனகாம்புஜமும் ஒரு புறமாகச் சயனித்துக்கொண்டு அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தனள். அரசனுக்கோ நித்திரைவாராமல் பெருங்கவலையும், சந்தேகமும், ஏக்கமும் உண்டாயின.

கணவனோடு உடன்கட்டை யேறும் உத்தமியையே அன்பற்றவளென்றும், கணவ னிறந்தானென்று தெரிந்தவுடனே உயிர் நீங்கப்பெறுமவளே கற்புடையாளென்றும் வற்புறுத்திக் கூறிய என்மனையாட்டிக்கு என்பால் அத்தகைய தலையன்புண்டா? நானிறந்தேனென்று கேட்ட மாத்திரத்தில் இவளும் உயிர் துறப்பளோ? என்னுஞ் சந்தேகமும் அதனாலாகிய ஏ[illegible] தூக்கத்துக் கிடையூறாயின. அன்றுமுத[illegible] தினங்களாக அரசனுக்கு இதுவே பெரும் [illegible]கத்துக் காரணமாயிருந்தபடியால் அவன் த[illegible] மனைவியின் அன்பைப் பரிசோதிக்க வேண்[illegible]மென்றெண்ணித் தன்னுடைய அமைச்சனாகிய சுமதி யென்பவனிடத்து அந்தரங்கமாக ஆலோசித்து, பின்னர் இருவரும் ஒரு சூழ்ச்சி செய்யலுற்றார்கள்.

(இன்னும் வரும்.)

இந்து மதாசாரமும் சுகாதார சம்பந்தமும்.

மதம் என்பது கொள்கை. அது காலத்திற்கும் தேசத்திற்கும் ஏற்றவாறு கடவுளனுக்கிரகம்பெற்ற பெரியோர்களால் உலகின் மக்கள் உறுதி யெய்துதற்பொருட்டு அமைத்த ஒரு வரம்பாகும். உறுதி உயிர்க்கேயன்றி உடலுக்கு அன்று. ஆயினும் உயிரைத் தாங்கும் நிலை உடலானதால் அவ்வுடலுக்கும் ஒரு உறுதி வேண்டப்படும். ஆகவே உடலுக்கும் சாதகமாகவே அப்பெரியோர்கள் மதங்களை யமைத்திருக்கின்றனர். இது எல்லா மதங்களுக்கும் பொருந்தும். இந்தப் பொருத்தத்தை ஊடுருவிப் பரிசோதியாத குறையினாலே மதவாதிகளும் மதாபிமானிகளும் தங்கள் தங்கள் மதங்களையே சிறப்பித்துப் புறமதங்களைத் தூற்றுகிற்பர். மதங்களமைந்த அந்தரங்கத்தை ஆராய்ந்தறிந்த கல்விமான்கள் பிறிதோர் மதத்தையும் நிந்தியார். நிந்திப்பவர் ஒரு மதாபிமானியேயாயினும் அந்த மதத்தின் உண்மையைத்தானும் உணராதவரென்றே சொல்லவேண்டும். இது எவ்வகைப்பட்ட மதத்தினர்க்கும் இயல்பேயாக; இந்துமதாசாரங்கள் உயிர்க்கேயன்றி எப்படி உடலுக்கும் பொருந்தியுள்ளன வென்பதை ஒவ்வொன்றாக இப்பத்திரிகையில் எழுதிவரத் துணிந்தேன்.

இவ்வியாசத்தை 1. மக்கள் நாள்தோறும் அதிகாலையில் நித்திரை விட்டெழுந்தது முதல் இரவில் நித்திரை கூடுமளவுஞ் செய்துபோதரும் மதாசாரக் கிரியைகளைச் சுகாதாரத்தோடு சம்பந்தப்படுத்தி நித்திய கருமவியல் என ஒரு இயலாகவும், 2. குடும்பக்காரியங்களைக்குறித்த மதாசாரங்களைக் குடும்பவியல் என ஒரு இயலாகவும், 3. தெய்வகாரியங்களைக்குறித்த ஆசாரங்களைச் சதாசாரவியல் என ஒரு இயலாகவும், ஒழிந்த 4. மற்றைபெல்லாக்கிரியைகளையும் ஒழிபியல் என ஒரு இயலாகவும் ஆக நான்கு இயல்களாகத் தொடங்கி முடிக்கலாம்.

இயல் வகைகளைத் தொடங்குமுன் இந்துக்களின் பிராசீன தற்கால வழக்கங்களையும் அவர்கள் கொண்டிருக்கும் நோக்கத்தையும், அவர்களையவ்வாறு கருதும்படி செய்வித்திருக்கும் பெரியோரது அறிவமைந்த நோக்க மாட்சியையுஞ் சிறிதெடுத்துப் பேசவேண்டுவது முக்கியம். 'பிடிக்குப்பிடி நமசிவாயம்' என்பது ஒரு பழமொழி. இதன் கருத்து எதை மேற்கொண்டாலும் தான் கொண்ட வொன்றையே பெரிதெடுத்துப் பேசுவதென்பது. இந்தப் பழமொழி இந்துக்களின் இயல்புக்கே முழுதும் பொருந்தும். இந்துக்கள் எந்தக் கருமத்தைச் செய்தாலும் எல்லாவற்றிலும் பாவம் புண்ணியம் என்னும் இரண்டு சொற்களையுமே பாராயணம் பண்ணிப் படிப்பது சகஜம். இதைத் தற்காலத்து நாகரீகம் படைத்த தேசத்தினரும், சமயத்தினரும், பாஷையினரும், இந்துக்களுள்ளும் அந்தத் தேச சமய பாஷைகளின் பழக்கமுள்ள சில பலருங் கூட மேலெழுந்த வாரியாகப் புறக்கணித்துப் பேசுவதுடன் இந்துக்களின் வழக்க வொழுக்கங்களைத் தடை செய்யவும் முயல்கின்றனர். முற்காலத்து வழக்க வொழுக்கங்களுள் இக்காலத்துக்கு வேண்டாதனவாய் அல்லது பொருந்தாதனவாயுள்ளவைகளை விலக்குவதாவது அல்லது மாற்றிப் புதுப்பிப்பதாவது கூடாதென்பதல்ல. இந்தக் காலத்துக்கும் அல்லது எந்தக்காலத்துக்கும் வேண்டுவனவாய் அல்லது பொருந்துவனவாயுள்ள வழக்க வொழுக்கங்களையும் அவ்வாறு சிதைப்பதனாற் பயனென்ன? மனுவின் காலத்துச் சில விதிகள் பிற்காலத்து வேண்டாதனவாயும், பொருந்ாதனவாயும் இருந்ததால் பிற்காலத்துப் பராசரரென்ற ஒரு மகரிஷி மனுஸ்மிருதி யுலகிற் பயின்று வரவும் தாமொரு ஸ்மிருதியைத் தம் பெயரால் எழுதி விதித்தனர். அதுவும் உலகிற் பயின்றுவருகின்றது. பயின்று வந்தாலும் இக்காலத்துக்கு அவ்விதிகளுட் சிலதானும் பொருந்தாதனவாயுமிருக்கலாம். இக்காலத்துப் பொருந்துவனவாய் அவற்றிற்கொப்ப கொள்கையில் வேறுபட்டுப் புதுப்பித்தல் கூடாதென்று நாம் சொல்லவரவில்லை. புதுப்பிப்பன யுக்திக்கும் உபயோகத்துக்கும் சாதகமாதல் வேண்டும். இக்காலத்து நாம் ஒன்றை புதுப்பிக்க முயல்வதினும் அல்லது குறைகாணப் புகுவதினும் அக்காலத்துப் பெரியோர் அமைத்தனவெல்லாம் எத்தகைய நோக்கமுடையனவென்று ஆராய்தல் நன்று. புண்ணிய பாவம் என்னுமிரண்டில் இந்துக்கள் மயங்குவதற்குச் சிறந்த நியாயமுண்டு. இலௌகிகம் வைதிகம் என்னும்

இரண்டு கொள்கைகளில் இந்துக்கள் வைதீகத்தில் வைத்துள்ள பயபக்தியைப்போல இலௌகீகத்தில் அவ்வளவாயிராது. எந்த இலௌகீகக் கொள்கையிலும் வைதீக பக்தியையே மேற்கொள்வது இந்துக்களுக்குச் சகஜம். புண்ணிய பாவம் என்ற இரண்டில் வைத்து எதையும் விதித்தால் அவர்கள் ஒழுக்கம் பெறுவார்கள் என்று கருதியே பெரியோரும் எல்லாவற்றிலும் புண்ணிய பாவங்களைக் கலந்து பேசினர். புண்ணிய பாவங்களின் பயன் சொர்க்க நரகமென்பது. இலௌகீக கருமங்களிலும்கூட அவ்விரண்டையுமே வைத்தனர். வைத்தார்களாயினும் அவையெல்லாம் உடலைப்பேணி அதன் மூலமாக உயிரை நிறுத்தி அவ்வுயிர்க்கு உறுதியைத் தேடுவதே யவர்கள் கருத்தாகும். அவ்வந்தரங்கத்தைத் தெரிந்தமட்டில் பேசலாம்.

1. நித்திய கருமவியல்.

நித்திரை விட்டெழுதல்.

"வைகறைத் துயிலெழு."

விடிய ஐந்து நாழிகைக்கு அதாவது காலை நாலரை மணிக்கு நித்திரை விட் டெழுந்திருவென்பது. வைகறை அதிகாலை. இது தேவர்களுக்குப் பிரீதியானகாலம் என்றும் இக்காலத்து நித்திரை விட் டெழுந்திருத்தல் உயிர்க்குப் பரிசுத்தந்தருமென்றும், அது புண்ணிய மென்றும், அதிகாலையில் எழுந்திராமை பாவமென்றும் கர்ம நூல்கள் கூறும். இதன் நோக்கம் யாது?

(இன்னும் வரும்.)

கோ வைத்தியலிங்கம் பிள்ளை.

——:o:——

பழமொழிகள்.

பலரின் ஞானம் ஒருவரின் யூகமாயமைந்ததே பழமொழி யென்னப்படும். "A Proverb is the wisdom of many and the wit of one." பூர்வீக வித்வ சிரோன்மணிகளிலநேகர் தமது ஞானத்தையும், யூகத்தையும், புத்தி தீக்ஷணியத்தையும் நித்திலக் கொத்துக்கொப்பான சித்திர சுலோகங்களாகவும், பழமொழிகளாகவும் உலகத்தவரின் நன்மையைக்கருதி அவர்கள் நடைஉடை பாவனைகளுக்கு முன் மாதிரியாக வைத்துப் போயினர். இவ்வித பழமொழிகள் தமிழ்ப் பாஷையில் பதினாயிரத்துக்கு மேல் உள. தமிழ்ப் பாஷையைப் பேசும் எவரும் தாம் சொல்லும் விஷயத்தினுண்மையை நிலை நிறுத்த முதுமொழிச்சார்பாகவே பேசுவர். எவர் பேசினும் இரண்டு பழமொழியில்லாத பேச்சு தமிழ் நாட்டிலரிது. பெண்களுக்குள்ளோ இது விசேஷம். அவர்கள் சிரித்தாலும் பழமொழி, சினந்தாலும் பழமொழி. ஆம் என்றாலும் பழமொழி, அல்லவென்றாலும் பழமொழி. அளக்கப்பழமொழி, விளக்கப்பழமொழி. எது விஷயத்திற்கும் எந்த வியாபாரத்திற்கும் பழமொழியே உபயோகிக்கின்றனர். கிழவிகளுக்குள்ளோ இது மகாவிசேஷம். அவர்கள் வாய்களிலிருந்து முத்துச் சரப்பளிபோல் பழமொழிக் கொத்துகள் உதிர்வதைக் கேளாதவரெவர்? ஆதலால், பழமொழிகளில் சிலவற்றையும் பலரினுபயோகத்திற்காகவும் இங்கு எடுத்துரைப்போம்.

1. நால்வர்வாக்கு தேவர்வாக்கு. எந்தவாக்குப் பொய்த்தாலும் சந்தைவாக்குப் பொய்யாது. நால்வர் கூடினுல் தேவசபை. நால்வரோ தேவரோ. The voice of the people is the voice of God.

2. நிழலின் அருமை வெயிலில் தெரியும் நெருப்பின் அருமை குளிரில் தெரியும். அப்பனருமை அப்பன் மாண்டால் தெரியும். உப்பினருமை உப்பில்லாவிட்டால் தெரியும். The worth of a thing is best known by the want of it.

3. பாடில்லாவிட்டால் பலனுமில்லை. கஷ்டே பலே. பள்ளமிறைத்த வனுக்குப் பங்குண்டு.

No gain without pain. They must hunger in frost that will not work in heat. No cross no crown. Bear the cross and wear the crown.

4. பாலுண்டவனுக்குப் பாலேப்பம், கள்ளுண்டவனுக்குக் கள்ளேப்பம். சட்டியிலுள்ளது தான் அகப்பையில் வரும். உண்டதுதானேப்பம் எடுக்கும். Nothing comes out of a sack but what is in it.

5. கெடுவான் கேடுநினைப்பான். கெடுவது செய்தால் படுவது கருமம். தான்வெட்டின குழியில் தானே விழுவான்.

Evil cometh to him that evil thinketh,
They hurt themselves, that wrong others.

6. அகழிலே விழுந்த முதலைக்கு அதுவே வைகுண்டம். இடுப்பு ஒடிந்த கோழிக்கு உரற் கிடையே தஞ்சம். காட்டுக்கோழிக்குக் கைலா சம் காடே. அடுப்பங்கரையே கைலாசம், ஆம் படையானே சுவர்க்கலோகம். They that be in hell think there is no other heaven. The mind is its own place, it can make a hell of heaven or a heaven of hell. *Milton*

விடுகதை வினுக்கள்.

(நேரிசை வெண்பா.)

காயங்கருத்திருக்குங் கம்மாரும் வானமல்ல
தூயமதுகுடிக்குந் துட்டரல்ல—நேயமுறு [ளார்
நல்லிசையைப் பாடிவரு காரியல்ல நாட்டிலுள்
சொல்லுவர்-பேர்-மூன்றெழுத்தாற் சொல் 1.

மாய்க்கும் விடந்தலையின்—மன்னுமரா தானல்ல
வாய்க்காலுமாருகும் மாதரசே—ஏய்க்குவிதம்
கற்றூலுங் கைக்குளகப்—பட்டுவிடுங் காசினியில்
ஒற்றெழுத்துப் பேரென்பா ரோது. 2.

பூ. ப. செல்லக்குமாரக் கவுண்டர்.

ஓர் ஊசி முனையின் மேலிருந்து ஒன்பதுகோடி இராஜ்யம் ஆளுகின்ற அரசனுக்குச் சிரசில்லே! அவன் மனையாளுக்கு உடலில்லை. அவள் கழுத் தில்லாக்குடமெடுத்து கரையில்லாத ஏரிக்குத் தண்ணீருக்குச் சென்றனள், ஆங்கு வாயில்லா மான் வேறில்லாபுல்லே மேய்ந்திருக்கக் கண்டு கையில்லா வேடன் கணையில்லா அம்பினுலெய் யவே அவ்வம்பானது மானுக்குப்படாமல் மான் வயிற்றிலிருக்குங் குட்டிக்குபடவே அக்குட்டி யானது கீழே விழுந்தது. 3.

சென்னே. E. D.

சந்தேகம்

மாபூ மல்லிகைப்பூ
மணக்குதடா துபாஷி
வெள்ளைக்குதிரைமே லேறாதே
வெள்ளாட்டி வார்த்தையுங் கேளாதே
கறுப்புக்குதிரை கலங்கடிக்குது
கப்பலேறியும் போகாதே

பூபூ புளியம்பூ
பொன்னேறி கொண்டைக்கு தாழம்பூ
சுண்ட சுண்ட முறுக்கிவைத்து
சூரியப்பன் கோயிலிலே
எட்டுக்கடா வெட்டிவைத்து
ஏழுபெண்களுந் தாலிக்கட்டி
மச்சான் மச்சான் வரும்வேளை
மலிகை கொம்பாலடித்தாண்டி
சுழன்று சுழன்று விழுந்தாண்டி
சொக்கட்டாமஞ்சட் குளித்தாண்டி. 1.

வேறு

காகா கருப்பங்கா கஞ்சிக்கூட்டுக்கு நெல்லிக்கா
ஓடி ஓடி மிளகா அரைத்து
ஒன்பது சட்டி கறியாக்கி
பார்க்கவந்தான் மென்மாமன்
பரிசம் போட்டா னென்மாமன்
அடிடா பிடிடா அடிமரத்திலே சாய்டா
என்னையேண்டா அடிக்கிறே
பிள்ளையுண்டா யிருக்கிறேன்
திரும்பயேண்டா அடிக்கிறே
தம்பி யுண்டாயிருக்கிறேன் 2.

அகஸ்தியர் பஞ்சபக்ஷி.

வெண்பா

காகத் தெழுத்தாற் கடி தாங்தையைக்கட்டி
வாகுற்றகோழி வழிமறித்துப்—பாகுற்ற
வல்லூறை தொட்டு வருமயிலைப் பூசிப்பார்
எல்லோரு மீடேற—வார் 3

வேறு

ஓக்கச்சிக் கொக்கு ரெட்டபிரம்பு
மூக்கனுஞ் சிலந்தி நாக்கலாபரணே
ஐந்திலே முடிப்பு ஆறுபேதாளம்
ஏழுபிரங்கி யெட்டினிற்கோட்டை
தொம்பம். 4

வாசித்த மஹான்களிவற்றின் கருத்தை இன்ன தென விளக்கிக்காட்ட பிரார்த்திக்கின்ற

ஆன்றோர்க்கடிமை,
வீ. அ. இராமச்சந்த்ரா புலவன்.

கேள்விகளுக்கு விடை.

இத்தலைப்பின்கீழ் மானிட மர்ம சாஸ்திரத்தையேனும் ரஞ்சிதபோதினியையேனும் வாசித்து வருபவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை கொடுக்கப்படும்.

ஆசனஸ்நானம். மானிட மர்ம சாஸ்திரம் 324 வது பக்கத்தில் சொல்லியிருக்கும் ஆசனஸ்நானத்தைப் பற்றிப் பலர் கேட்கும் கேள்விகள்:— (1) இந்திரியஸ்கலித முடையவர்களுக்கு இந்த ஸ்நானத்தால் நன்மையுண்டா? (2) தண்ணீரோ வெந்நீரோ உபயோகிக்கவேண்டும்? (3) எவ்வளவு நேரம்? (4) ஸ்நானத்திற்குப்பின் நித்திரை அவசியமா? (5) 325-வது பக்கத்தில் "காமவிகாரத்தை அடக்க நோக்கமுள்ளவர்கள் 30 நிமிஷத்திற்குக் குறையாமல் குளிர்ந்த ஜலத்தில் ஆசனஸ்நானஞ் செய்துவரவேண்டும்" என்று சொல்லியிருப்பதால் காமவிகாரம் முற்றிலுமே இல்லாமல் போகுமோ?

விடை. மானிட மர்ம சாஸ்திரம் 325-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கும் ஆசனஸ்நானம் விசேஷமாய்க் கர்ப்பிணிகளுக்காகச் சொல்லப்பட்டபோதிலும், இந்திரியஸ்கலித முதலிய நோய்களில் வருந்தும் ஆடவர்க்கும் இது மகா சிறந்த சஞ்சீவியாகும். (2) தேகதிடமுள்ளவர்கள் அதிகக் குளிர்ச்சியில்லாத தண்ணீரிலேயே ஆசனஸ்நானஞ் செய்யவேண்டும். பலவீனர் இளவெந்நீர் உபயோகிக்கலாம். (3) இந்திரியஸ்கலித முள்ளவர்கள் இருபது முதல் முப்பது நிமிஷம்வரை ஆசனஸ்நானத் தொட்டியில் உட்கார்ந் திருக்கலாம். (4) ஸ்நானத்திற்குப்பின் அரைமணி நேரம் நித்திரை பலவீனருக்கும் கர்ப்பிணிகளுக்கும் அவசியமேயன்றி திடதேகிகளுக்கு அவசியமில்லை. (5) ஆசனஸ்நானம் நெடுநேரஞ் செய்வதால் இந்திரியங்கட்டுப்பட்டு தேகாரோக்கியமுண்டாகி அற்ப இச்சையை அடக்குஞ் சக்தியுண்டாகுமேயன்றி கலவியின் இன்பம் அதனால் கெட்டுப்போக மாட்டாது. குஸ்திமுதலிய தேகாப்பியாசத்தால் காம இச்சை முற்றிலும் அற்றுப் போகிறதில்லையே. அதே சக்திதானுண்டாகும் ஆசனஸ்நானத்தினாலும்.

இப்பத்திரிகையின் விஷயமாகப் போடப்படும் திருவுளச்சீட்டின் விபரமென்ன?

விடை. ரஞ்சிதபோதினிக்கு ஒரு வருஷ சந்தாவாகிய ரூ 3-ம் முன் பணம் அனுப்பும் முதல் 1000 சந்தா நேயர்களுக்குள் திருவுளச்சீட்டு உதயமாகப் பெறும் 100 சந்தா நேயர்களுக்கு மானிடமர்மசாஸ்திரத்தின் 100-பிரதிகளை இனாமாகக்கொடுப்போம்.

—:o:—

உள்ளூர் வர்த்தமானம்.

நாளது நவம்பர்மீ 14-ம் தேதியன்று திருநெல்வேலி சகாயநிதி சங்கத்தின் முதல் வருஷ மகோற்சவம் வெகு விமரிசையுடன் கொண்டாடப்பட்டது பர்மாவில் தங்கம், தங்கமாய்ப் பெயர்த்தெடுக்கலாமென்னும் பேராவல் கொண்டுவரும் அநேகர் அதிக காலமாக உத்தியோகங்கிடையாமல் அலைந்து திரிந்துவிட்டுக் கடைசியாய்த் தம் இனஜனபந்துக்களோடாவது போய் சேருவோமென்னும் ஆவல்கொண்டிருக்குஞ் சமயம் அவர்களுக்குக் கப்பல் செலவு முதலியவைகள் கொடுத்து ஆதரிக்கும் பொருட்டும், அநாத ஏழைகளின் அவசரத்துக்குத் தக்கது உதவிபுரியும் பொருட்டும் திருநெல்வேலியிலிருந்து வந்திருக்கும் சில புண்ணிய குண சீலர்களால் இச்சங்கம் நடந்தேறிவருவதாகத்தெரிகிறது.

கடந்த அக்டோபர்மீ 7-ம் தேதியன்று வித்வான் தண்டலம் பாலசுந்தரமுதலியார் கோர்ட்டில் தர்ஜினமா செய்துகொண்டிருக்கும் சமயம் திடீரென அகால மரணத்துக்குள்ளானதை மிக்க விசனத்தோடு அறிவிக்கின்றோம். இவர் ஆலோசனை சொல்வதிலும், எவ்விஷயத்திலும் மிதமிஞ்சிச் செல்லாமல் மட்டுப்படுத்தி வைப்பதிலும் எமக்கு ஓர் பிதாவுக் கொப்பாயிருந்தார். இந்த மாதத்தில் தமது வேலையினின்றும் நீங்கி பென்ஷன் வாங்கினவுடன் ரஞ்சிதபோதினியையே யாவர்க்கும் நன்மைபயக்கும் வண்ணம் நடத்தி வர வேண்டுமென்னும் பேராவல் கொண்டவராயிருந்தார். இம்மகானிடத்திலுள்ள ஓர் சிறந்த குணம்:— கைம்மாறுகவாமற் கற்றறிந்தார்— மெய்வருந்தித் தம்மாலியலுதவி தாஞ்செய்வார். என்பதற்கிசைய பிரதியுபகாரம் கருதாமலே மற்றவர்க்குஎவ்வித உதவியும் செய்யவேண்டுமென்பதேஇவரின் விசேஷ நோக்கம்.

இவ்வித்வ சிரோன்மணியின் திருவுருவப்படத்தை இப்பத்திரிகையில் காணலாம்.

ரங்கோனில் இதுவரை நல்ல நடுக்கடல் மீன்கள் கிடைப்பதரிது. சாதாரண மீனுங்கூட விலை ரூ. 1—8- அக யிருந்தது இப்பொழுதோ 'லார்க் என்ற ஓர் மீன் பிடிக்கும் புகைக்கப்பல் வந்து ஒன்றரை, இரண்டு நாள் பயணம் நடுக்கடலுக்குப் போய் முதல் தரமான மடவா, பாறை, வஞ்சிரம், முதலிய நேர்த்தியான மீன்கள் வாரத்திற்கிருமுறை பனிக்கட்டி (Ice) யில் பந்தோபஸ்து செய்து கொண்டு வரப்படுகின்றன. விற்பனையாகும் மட்டும் இவை பனிக்கட்டியிலேயே யிருப்பதால் ருசியில் புதுமீன்களுக்குச் சமானமாகவே யிருக்கின்றன.

33-வது கல்லியில் 11-ம் நம்பர் வீட்டிலிருந்த ஓர் பர்மா சமையல்காரன் நவம்பர்மீ 20-ம் தேதி சனிக்கிழமை காலை 4-மணிக்கு ஓர் நீண்ட வாளினால் அந்த வீட்டிலுள்ள ஒரு மனுஷனையும் ஓர் ஸ்திரீயையும் கொன்று போட்டான். கூக்குரல் உண்டாக்கிய வேறொரு கிழவியையும் குற்றுயிராக்கிவிட்டான். இந்தக் குழப்பத்தில் வீட்டில் தூங்கிய எல்லோரும் கீழ்மெத்தைக்கு ஓடினார்கள். ஓர் பர்மாக்காரன் ஜன்னல் வழியாக கீழே குதிக்கவே முகங்குப்புற விழுந்து வலது கை ஒடிந்துபோயிற்று. முகத்திலுங்காயம். இருபது நிமிஷத்திற்குப்பிற்பாடு போலீசார் அவ்விடம் போய்ப்பார்க்க கொலைஞன் ஓடித்தப்பித்துக்கொண்டான். வீதியெங்கும் அமளி குமளியா யிருந்தது.

ஷக்காரு என்பவன் 57-வது கல்லியில் நவம்பர்மீ 20-ம்தேதி சனிக்கிழமை இரவு 4-மணிக்கு ஒரு பெரிய மூங்கில் குச்சியின் உதவியால் மேல் மெத்தைக்கு ஏறி அங்குள்ள 1075-ரூ. பெறுமான நகைகளை எடுத்துக்கொண்டு ஓர் கயிற்றின் வழியாய் கீழேயிறங்கி தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது தெருச்சுற்றிப் பார்க்கும் போலீஸார் கையில் அகப்பட்டுக்கொண்டான்.

வெளிநாட்டு விஷயங்கள்.

சென்னை. டிசம்பர்மீ சென்னையில் (National Congress) என்னும் மகாஜனசபை கூட்டமிருக்கும். இந்தியா முழுவதிலும் குழப்பமுண்டாயிருக்கும் இச்சமயத்தில் மகாஜனசபை சென்னையில் கூடுவது யுக்தமன்று என முதலில் வாதிக்கப்பட்டதாயினும் இந்தசமயத்தில் தான் அவ்விதக்கூட்டம் அவசியமெனக்கருதி அதையே கைப்பிடிக்கலாயினர். சென்னை காங்கிரஸ் நல்ல பலனைத்தந்து தேசத்தின் அமளிகுமளி மட்டுப்பட கடவுள் கடாக்ஷிப்பாராக.

சீனா. ஹாங்காங்கில் ஜப்பானியரின் சாமான்களை விற்கக்கூடாதென்று ஒரு பெரியபாய்காட் கலகம் நடந்தது. ஒரு சீனக்கூட்டம் ஜப்பானிய சரக்கை வைத்திருந்த 2 சீன ஷாப்புகளைக் கொள்ளையிட்டார்கள். இரண்டு வியாபாரிகளின் காதுகளையும் ஒரு வியாபாரியின் மூக்கையும் அறுத்துவிட்டார்கள்.

இந்து மகம்மதிய ஐக்கியம்:—'இட்' என்பது மகமதியர்களுக்குள் ஒரு முக்கியமான பண்டிகை. இந்தப் பண்டிகை சமீபத்தில் வங்காளத்தில் மிகவும் அமைதியாகக் கொண்டாடப்பட்டது. கல்கத்தாவிலேயுள்ள காபூல் மகம்மதியர்கள் இரண்டு கக்ஷியாக வெகுநாள் பிரிந்திருப்பதில் தங்களுக்குள்ள மனஸ்தாபங்களை இந்தப் பண்டிகை தினத்தில் தீர்த்துக் கொள்வதென்று ஏற்பாடு பண்ணியிருந்தபடியால் எங்கே பெரிய கலகம் நடைபெறுமோ எனப் பயப்படவேண்டியிருந்தது. ஆனால் போலீஸார் ஜாக்கிரதையா யிருந்தபடியால் விஷயங்கள் அமைதியாகவே முடிவு பெற்றன. கல்கத்தாவிலும் மற்றும் சுற்றியுள்ள விடங்களிலும் 'இந்து மகமதிய ஐக்கியம்' எனப் பெயரிட்டு உல்லாசமான கூட்டங்கள் கூடின. சென்ற செவ்வாய்க்கிழமை மாலை கல்கத்தாவிலும் அநேகமாயிரம் இந்துக்களும் மகமதியர்களும் கூடி ஒருவர்க்கொருவர் சந்தோஷங் காட்டிக்கொண்டார்கள். பார்ட்வானிலும் இவ்விதம் கூட்டம் கூடியபோது, துருக்கி விஷயமாய் ஐரோப்பிய ராஜாங்கத்தார் அனுஷ்டிக்க ஆரம்பித்திருக்கும் நியாயவிரோதச் செய்கைகளைக் கூட்டத்திலுள்ளவர்களெல்லாம் கண்டித்து இங்கிலாந்து தேசம் துருக்கியிடம் காட்டியிருக்கும் அனுதாபத்தைப் புகழ்ந்தார்கள். பொதுவாக எல்லா ஐரோப்பியச் சாமான்களையும், முக்கியமாய் ஆஸ்டிரியா ஜெர்மனிச் சாமான்களையும் வர்ஜனஞ்செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ஜப்பானில் கிறிஸ்துமதம்:— ஜப்பானின் ஜனத்தொகை 10-கோடி. இவர்களில் 1½ லக்ஷம் பேர் கிறிஸ்தவர்கள், அதாவது 1000-க்கு 3பேர். உயர்ந்த அந்தஸ்திலுள்ளவர்கள் சபையின் அங்கங்களாயிருக்கின்றனர். புத்தரான ஜப்பானியர் கிறிஸ்தவர்களை வெகு கண்ணியமாய் மதிக்கின்றனர். ஜப்பான் இராஜ்யத்தின் பார்லிமெண்ட் சபையில் முன் 7-கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். இந்த வருஷத்தில் 14-பேர் இருக்கின்றனர்.

ஜனுனு கூலன்.

தீர்க்காயுசு பெற்றவன்:—துருக்கி ராஜ்யத்தின் தலைநகராகிய கானஸ்டாண்டிநோப்பிள் பட்டணத்தில் காலே கிராவூப் என்னும் சேணந் தைப்பவனுக்கு இப்போது 132 வயதாகிறதாம். இன்னமும் அவன் தளராமல் வேலை நடத்தி வருகின்றானும். இவன் தன் வீட்டைவிட்டு ஒருநாளும் வெளியே சென்றது கிடையாதாம். இவன் தகப்பனும் 142 வயதுடையவனுப் மரித்தானும்.

துருக்கிய மாதர்கள்:— பார்லிமெண்டு முறையான ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட துருக்கியில் ஆடவர்களுக்கு மாத்திரமன்றி ஸ்திரீகளுக்குங்கூட அடங்காப் பெருமகிழ்வை யுண்டாக்கி விட்டதாய்த் தெரிகிறது. நாயகம் சுல்தானவர்களுடைய ஐராது வெளிப்பட்டவுடனே உயர்ந்த குடும்பத்தவளாகிய ஒரு துருக்கிய மாது புர்தாவைத் தூக்கித் தூரவெறிந்துவிட்டு சுயாதீனமென்று சித்திரிக்கப்பட்டிருந்த ஒரு கொடியைக் கையிற் பிடித்துக்கொண்டு வெளியே புறப்பட்டு விட்டாளாம். அந்த மாதுசிரோன்மணி ஒரு கோஷாஸ்திரீயாக யிருந்தும் அவளுடைய அடக்கக்கூடாத ஆனந்த மகிழ்ச்சியால் அவ்விதம் வெளிப்பட தேசாபிமானிகளாகிய பிரபுக்களும் கனவான்களும் பண்டிதர்களும் ஓடோடியுஞ் சென்று அந்த உத்தம ஸ்திரீயின் கரங்களை முத்தமிட்டார்களாம். (அல்லிலா)

14-11-08 முஸ்லிம்நேசன்.

பொது வர்த்தமானம்.

உலகமுழுவதிலும் 34,274 வர்த்தமானப் பத்திரிகைகள் இருக்கின்றன. இவற்றுள் ஐரோப்பாவில் 19,557 ம், வட அமெரிக்காவில் 12400-ம் பிரசுரிக்கப் படுகின்றன. ஆகவே, ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் மட்டும் 31,957 வர்த்தமானப் பத்திரிகைக ளிருக்கின்றன. மீதி 2317 மட்டிலும் உலகத்தின் மற்றப்பாகங்களில் பிரசுரிக்கப்படு கின்றன. இவற்றில் ஆசியாவில் 775-ம், தென் அமெரிக்காவில் 699-ம், ஆஸ்திரேலியாவில் 661-ம், ஆப்பிரிக்காவில் 182-ம் பிரசுரிக்கப் படுகின்றன. பத்திரிகையின் தொகையை ஜனத்தொகையோடு ஒத்துப்பார்க்கும்பொழுது, ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் 2000 குடும்பத்துக்கொரு பத்திரிகையும், உலகத்தின் மற்றப் பாகங்களில் 9000 குடும்பத்துக் கொரு பத்திரிகையும் பிரசுரிக்கப் படுகின்றன. இங்கிலிஷ் பாஷையில் 16500-ம், ஜெர்மன் பாஷையில் 7350-ம், பிரஞ்சு பாஷையில் 3850-ம், ஸ்பானிஷ் பாஷையில் 1600 மாம். முதல்வர்த்தமானப் பத்திரிகை 1457-ம் வருஷத்தில் பிரசுரிக்கப்பட்டது. இங்கிலாந்தில் லண்டன் கெசற் என்கிற முதல் பத்திரிகை 1665-ம் வருஷம் ஆரம்பிக்கப் பட்டதாம்.

வயோதிகர் மிகுத்த தேசம்.

ஜெர்மனி தேசத்திலுள்ள ஓர் சாஸ்திரி பல தேசங்களிலுமுள்ள ஜனத்தொகையையும் ஒத்துப் பார்த்து எங்கெந்த தேசத்தில் எத்தனையெத்தனை பேர் 100 வயதுக்கு மேற்பட்டுள்ளவர்க ளிருக்கிறார்களென்று கண்டுபிடித்திருக்கிறார். ஜெர்மன் தேசத்திலுள்ள 5 கோடியே 80 லக்ஷம் ஜனங்களுக்குள் 100 வயதுக்கு மேற்பட்டவர்கள் 100 பேர்கூட இல்லை யென்றும், இங்கிலாந்தில் அப்படிப்பட்டவர்கள் 146 பேரிருக்கிறார்களென்றும், பிரான்சு தேசத்தில் 213 பேர், ஸ்பேனில் 410, செர்வியாவில் 573, ரொமேனியாவில் 1084, பல்கேரியாவில் 3880 பேர் என்றும் கண்டுபிடித்திருக்கிறார். இவ்விதமாய் பல்கேரியாவில் 1000-ம் பேரில் ஒருவன் 100 வயதுக்குமேல் உயிரோடிருப்பதாகத் தெரியவருகிறது. பல்கேரியாவில் வருஷம் ஆயிரம்பவுன் வரும்படியுள்ளவர்கள் நூறுபேர்கூட இல்லை. அவர்களெல்லோரும் விவசாயஜீவனஞ் செய்கிறவர்கள். நிலமில்லாத ஏழைகள் அங்குகிடையாது. ஒவ்வொரு குடும்பத்தாரும் தத்தம் நிலங்களில் வீடுகட்டிக் கொண்டு உழைத்து ஜீவனஞ் செய்பவர்கள். ஒவ்வொரு ஆடவனும் யுத்தப்பயிற்சி செய்துகொள்ளவேண்டியது கட்டாயம். 20 வயதுமுதல் 45 வயதுவரையிலுள்ளவர்கள் அவசரகாலத்தில்

ஆயுதபாணிகளாய் யுத்தஞ்செய்ய வேண்டும். இவர்கள் மல்யுத்தத்தில் பராக்கிரம சாலிகளான போதிலும் ஆயுதப்பயிற்சி யதிகந்தெரியாது. ஆனால் வறுமையின்றி எப்பொழுதும் தம் பிரயாசத்தின் பலனை மகிழ்ச்சியுடன் அனுபவித்து வருவதால் இவர்கள் ஆயுள்விர்த்தியாவதாகத் தெரியவருகிறது.

———:o:———

Prize Competition for December.

பரிசு விபரம்.

———:o:———

1. நமது போதினியின் 30-வதுபக்கத்தில் Some Sensible Suggestions என்ற தலைப்பின் கீழ் சொல்லியிருக்கும் விபரங்களடங்கிய வியாசமொன்று யாவர்க்கும் விளங்கக்கூடிய இனிய செந்தமிழ் நடையில் முதுமொழிச் சார்பாகவும் பெரியோர்களால் விளக்கியுள்ள நீதிகளையும் பாடல்களையும் ஆங்காங்கு சந்தர்ப்பத்துக் கிசைவாக அமைத்ததாகவும் எழுதி யனுப்புகிறவர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 10, இரண்டாவது பரிசு ரூபாய் 5, மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வியாசங்களுக்கு ரூபாய் 2 விகிதமும் கொடுக்கப்படும்

2. வியாசமானது சுமார் இரஞ்சித போதினியின் மூன்று பக்கங்களுக்கு மேற்படாததாகவும் இரண்டு பக்கங்களுக்கு குறையாததாகவும் காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட்டதாகவு மிருக்கவேண்டும்.

3. 1909-ம் வரு ஜனவரி-மீ 15 ம் தேதிக்குள் பத்திராதிபர் கையில் சேரவேண்டும். பெப்ரவரி-மீ பத்திரிகையில் பரிசு பெற்றவர்களின் நாமங்களும் அவர்கள் எழுதிய வியாசங்களில் சிலவும் வெளியிடப்படும்.

4. பத்திராதிபரின் தீர்ப்புக்குமேல் வழக்கில்லை.

5. தபால் முத்திரை அனுப்பினவர்களுக்கன்றி மற்றவர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாத வியாசங்கள் திரும்ப அனுப்பப்படமாட்டா.

6. இரஞ்சிதபோதினிக்கு ஒரு வருஷ சந்தாவாகிய ரூபாய் 3 அனுப்பாத நபர்களின் வியாசம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. பதிலறிய விருப்பமுள்ளவர்கள் ரிப்ளை கார்டாவது முத்திரையாவது அனுப்பவேண்டும். அவசரமில்லாதகேள்விகளுக்குபதில்கிடையாது.

8. வியாச மொவ்வொன்றின் தலைப்பிலும் இரஞ்சிதபோதினி ரசீதின் நம்பர், பெயர், விலாச முதலியவைகளைத் தெளிவாய் யெழுதி யனுப்ப வேண்டும்.

9 பக்கம் 19-ல் சொல்லியிருக்கும் விடுகதைகள் மாதிரி யெழுதி யனுப்புகிறவர்களுக்கு கதை ஒன்றுக்கு 4 அணு விகிதமும் பக்கம் ஒன்றுக்கு ரூ. 2 விகிதமும கொடுக்கப்படும்,

10. மற்ற விபரங்களுக்கு 26-வது பக்கம் பார்க்கவும்.

———

புத்தக வரவு.

போஜ சரித்திரம். இது ஓர்புதிய நாடகம், ஹைக்கோர்ட் வக்கீல் ஸ்ரீமான் T. S. நாராயண சாஸ்திரி பி. ஏ., பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. ஆசிரியர் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம், முதலிய பாஷைகளில் விற்பன்ன ரென்பதை இப்புஸ்தகம் நன்கு விளக்கும். இதிலுள்ள 16 சித்திரப்படங்களும் வெகு பிரயாசையுடன் அமைக்கப் பட்டனவாகத் தோன்று கின்றன. இதன் விலை ரூபாய் 1—8—0.

———

கற்பகவல்லி. இந்துக்களுடைய நடை, உடை பாவனைகளை நன்கு விளக்கும் ஓர் இனியகதை. இதை எழுதியவர் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களில் வல்லுநராகிய வித்வ சிரோன்மணி ஸ்ரீமான் கோ. வைத்தியலிங்கம் பிள்ளை. இந்நூல் யாவரும் எளிதில் உணரக்கூடிய தெள்ளிய செந்தமிழ் நடையில் வரைந்துள்ளதாதலின் இஃது தமிழ் உலகமுற்றும் விரைவில் பரவுமென்பதற்கு ஐயமில்லை.

———

பினங்கு கலாநிதி. இம்மகுடம் புனைந்து வாரமொருமுறை வெளியிடுவதாகத் தீட்டிய அரிய தமிழ் பத்திரிகையொன்று வரப்பெற்றோம். திடமான கிளேஸ் காகிதத்தில் முத்துக்களைப் போன் றஸ்பஷ்டமான எழுத்துக்களில் அச்சிடப்பட்டு வருகிறது. இதன் பத்திராதிபர் ஆங்கிலம், தமிழ், அராபி முதலிய பாஷைகளில் விற்பன்னரான ஸ்ரீமான் அ. முகம்மது அப்துல் காதிறு அவர்கள். இது சொற்சுவை பொருட்சுவை மலிந்து சுக நடையில் பினங்கு நாட்டு வர்த்தமானம் இதர நாட்டுவர்த்தமானங்களை ஏந்தியுள்ளதாதலின் யாவரும் இதற்கு உதவி புரிந்துபாதுகாப்பார்களென நம்புகின்றோம்,

KEY-NOTES FOR THIS MONTH.

ஜீவாதார மந்திரோபதேசம்.

முப்பது நாளைக்கு காலையிலெழுந்திருந்தவுடனும் நித்திரைக்குப் போகுமுன்னும் இப் பக்கத்தை பல தடவை வாசித்து தியானிப்பவர்களுக்கு சுகசெல்வ பாக்கியம் பெருகும். நினைத்த காரியம் கைகூடும்.

நான்

I.

நான் நானே. என் சரீர மனோசக்திகள் யாவையும் கடவுள் ஒத்தாசையால் ஆண்டு நடத்துவது நானே.

தெய்வம் என்னில். நான் அவரில்.

நான். நானே! நான். நான். நான். நானே.!

என்னால் கூடும். நான் செய்வேன்.

I Can & I Will.

கடவுள் எனக்கு அபார சக்தியைக் கொடுத்திருக்கிறார். நினைத்ததை முடிக்கும் வல்லமை யெனக்குண்டு. என்னால் கூடாததொன்றுமில்லை. நான் செய்வேன். நானே செய்வேன். என்னால் முடிக்கக்கூடும். ஓ! என் சக்தி அபார சக்தி. நான் நினைத்த காரியம் எவ்விதத்திலும் கைகூடும். தெய்வம் என்னில். நான் அவரில். அண்டசராசரங்களிலுள்ள சக்திகளின் சத்து எனக்குள் பாய்ந்து பலன் தருவதால் என்னால் கூடும். நான் செய்வேன்.

இந்த மந்திரத்தை ஒரு தனித்த இடத்திலிருந்து உச்சாடனம் செய்யும்பொழுது இரு புருவங்களுக்கும் நடுவிலுள்ள நெற்றிக்கண்ணில் மனதையூன்றி மூர்ச்சை விடாமல் உள்ளடக்கி மனதைச் சிதறவிடாமல் தியானிக்கவேண்டும். இதைத் தியானித்துக் கொண்டிருக்கும்பொழுதே அபார சக்தி உமக்குள் உண்டாவதை உணர்வீர். உமது சரீரம் நிமிர்ந்திருக்கிறதையும், புயங்களிரண்டும் பின்னாகவும், நெஞ்சு முன்னாகவும், கண்களிரண்டும் ஒரே நிலையிலும் நிற்கிறதைக் காண்பீர். **நான்**. ஓ! உன்னத சக்தி! என்ன பராக்கிரமம்! உமக்குள்ளிருந்த வல்லமையின் மகத்துவத்தை நீர் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? இந்த க்ஷணமே உமக்குள் உண்டாகியிருக்கும் மாறுதலைப் பார்த்தீரா? இன்றுமுதல் நீர் வேறு மனுஷன். நீர் எங்கே சென்றாலும், யாரிடம் பேசினாலும், எந்த விஷயத்தைச் செய்தாலும் **நான். நான் செய்வேன். என்னால் கூடும்.** என்பதை இந்த மாத முழுவதும் மனதில் வைத்துத் தியானிக்கச் சகலமும் சித்தியாகும். அடுத்த மாதம் வேறு சில மந்திரங்கள் வரும். சத்திய மேவஜயதே! ஓம் தத் சத் ஓம்!

THE RANGOON

Ranjitha Bodhini.

OFFICIAL ORGAN OF THE

SWADESHA SUGADARA SANGAM.

Devoted to Health and Happiness, Love and peace,
New Thought and Psychic Research,
Magnetic healing and Suggestive Therapeutics.

Distribution of Prizes.

100 Copies of Manida Marma Shastra will be given away as prizes among the first 1000 Subscribers, in March 1909.

The Rangoon Ranjitha Bodhini is published on the first of every month. The mission of this magazine is to lead all to love and truth, to teach tolerance and moderation, to stimulate knowledge, to help the weak, to heal the sick, to teach charity and peace, to spread happiness, and to throw light upon hidden mysteries.

